2017 மார்ச் 08
புதன்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஜ.ஆகிர் பிறை 08 ■ பக்கங்கள் 12 ■ மணி 03 ■ ஒளி 039

QD / 154 / NEWS / 2017

NAVAMANI DAILY
නවමණි දිනපතා
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்







குசல், அசேல அபாரம் வலுவான நிலையில் இலங்கை 12»

பெண் பேசப்படும் நாள் 07»

ரூபாவிற்கு என்ன நடக்கிறது? 04»

## கண்டி நகரில் சு.க. மேதினக் கூட்டம்



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மேதினக்கூட்டத்தை கண்டியில் நடத்துவதற்கு கட்சி மத்தியகுழு தீர்மானித்துள்ளது.

கட்சியின் ஊர்வலத்தை கட்டம்பே நகரிலிருந்து

11 »»»»

# நல்லாட்சி அரசாங்கம் மக்களை ஏமாற்றுகிறது

பட்டதாரி பிரச்சினைக்கு தீர்வில்லை

விவசாயிகள் பெரிதும் பாதிப்பு

சபையில் ஹிஸ்புல்லா விசனம்



■ பாராளுமன்ற செய்தியாளர்

கிழக்கு மாகாணத்தில் பட்டதாரிகள் தொழில்கோரி நடத்தும் உண்ணாவிரதப் போராட்டம் குறித்து ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியும் இதுவரை எந்தத்தீர்வும் பெற்றுக்கொடுக்கப்படவில்லை என மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

நிதிக்கட்டளைகள் தொடர்பான விவாதத்தில் பேசுகையிலே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் பேசிய அமைச்சர் கூறியதாவது, இவர்கள் தொடர்பாக அரச தரப்பில் இதுவரை எந்த உறுதிமொழியும் வழங்கப்படவில்லை. வறிய பட்டதாரி மாணவர்கள் வெயிலோ மழையோ பாராது நடத்தும் இந்த போராட்டத்தை கைவிட்டு வாருங்கள் பேச்சு நடத்துகிறோம் என்று கூட அரசாங்கம் சொல்ல தயாராக இல்லை எனவும் அவர் கூறினார்.

இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணுதல், புதிய அரசியல் உருவாக்குதல், காணிப் பிரச்சினைக்கு தீர்வு காணுதல் போன்ற கனவுகளுடனே மக்கள் புதிய அரசாங்கத்தை கொண்டு வந்தார்கள்.

ஆனால் மக்கள் இன்றும்

11 »»»»

## இந்திய மீனவர் கொலை

## பிரதமர் ரணிலிடம் இந்தியா கேள்வி



இலங்கை பிரதமருடன் மீனவர் பிரச்சினை குறித்து பேசியுள்ள இந்தியா தமிழக மீனவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட விடயம் குறித்து, இலங்கை பிரதமரிடம் கேள்வி எழுப்பியுள்ளதாக, இந்திய வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. இராமேசுவரத்தைச் சேர்ந்த மீனவர் ப்ரிட்ஜோ, இலங்கை கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்ததாக இந்திய ஊடகங்களில் செய்தி

11 »»»»

## மு.கா. வின் எதிர்ப்பினால்

## வடமேல் மாகாண சபை நம்பிக்கையில்லா பிரேரணை ஒத்திவைப்பு

■ பிறவ்ஸ் முஹம்மட்
■ இக்பால் அலி

வடமேல் மாகாணசபையில் ஆளுநருக்கு எதிராக நேற்று செவ்வாய்க்கிழமை (07) சமர்ப்பிக்கப்படவிருந்த

11 »»»»

## போதைப்பொருள் கடத்தலை தடுக்க பொது உடன்பாட்டுக்கு வரவேண்டும்

ஜகார்த்தா மாநாட்டில் ஜனாதிபதி அழைப்பு



இந்து சமுத்திர பிராந்திய நாடுகள் முகங்கொடுத்துள்ள பாரிய சவாலான சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலை தடுப்பதற்கு பிராந்தியத்திலுள்ள நாடுகள் பொது உடன்பாட்டுக்கு வர வேண்டுமென ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நேற்று முற்பகல் இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகரில் ஆரம்பமான இந்து சமுத்திர பிராந்திய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

11 »»»»

## பாராளுமன்றில் விமலின் பிறந்தநாள் கொண்டாட்டம்





தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் 47ஆவது பிறந்ததின நிகழ்வுகள் நேற்று(07) பாராளுமன்ற வளாகத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. கொழும்பு மகசின் சிறைச்சாலையில் 56ஆவது தினத்தைக் கடத்தும் அவர் நேற்று பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள வந்த போதே இந்நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் கூட்டு எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்கள், பாரியார் ஷஷீ வீரவன்ச, மகள் விமாஷா, மகன் விபூதி ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

## மைத்திரிக்கு நோபல் பரிசு; வாய்ப்புகள் அதிகம்

ராஜித நம்பிக்கை



■ எம்.ஏ. முஹம்மட் உவைஸ்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு முழுமையான ஜனநாயகவாதியாகத் திகழ்வதால் அவருக்கு நோபல் பரிசு கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்;

11 »»»»

## ஊடகவியலாளர் ஸ்டார் ராசிக் காலமானார்



மூத்த ஊடகவியலாளர் ஸ்டார் ராசிக் (71) நேற்று காலமானார். 35 வருட காலமாக ஊடகத்துறையில் பணி புரிந்த இவர் தினகரன்

11 »»»»

## பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் இன்றும் நாளையும் பணிப் பகிஷ்கரிப்பு

■ ஆதில் அலி சப்ரி

அரசாங்கம் அரச பல்கலைக்கழகங்களின் தரத்தை குறைப்பதற்கும், தனியார் பல்கலைக்கழகங்களின் தரத்தைக் கூட்டுவதற்கும் நடவடிக்கையெடுப்பதைக் கண்டித்து அரச பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் இன்றும் நாளையும் நாடு தழுவிய பணிப் பகிஷ்கரிப்பொன்றை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக

11 »»»»

## இராணுவ தளபதிகளின் கைது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்



அதுரலிய ரதன தேரர்

■ ஆதில் அலி சப்ரி

இராணுவ தளபதிகளைக் கைதுசெய்வது தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் அதுரலியே ரதன தேரர் தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி, பிரதமருக்கு

11 »»»»

## பாராளுமன்ற குழு கூட்டத்தில் அமளிதுமளி

■ ஆதில் அலி சப்ரி

ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் அதுரலியே ரதன தேரர் அண்மையில் ஸ்தாபித்த ஸ்ரீலங்கா ஜாதிக மகா சபா கூட்டத்தில் அரசாங்கத்தையும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவையும் விமர்சித்திருந்தமை ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற குழு கூட்டத்தில் அமளிதுமளியை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற குழு கூட்டத்தில் ஐ.தே.க தேசிய பட்டியலில் பாராளுமன்றம் நுழைந்த ரதன தேரரின் அரசியல்

11 »»»»

# குடும்பத்தை வலிமைப்படுத்தும் பிரதான தூண்டுகோளாக பெண்கள்

## அமைச்சர் அர்ஜுன ரணதுங்க



நாட்டில் உண்மையான அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டுமாயின் அந்நாட்டிலுள்ள குடும்ப உறவுகளை மேம்படுத்துவது கட்டாயமானதாகும் அதற்கு குடும்பத்தை வலிமைப்படுத்தும் பெண்களை உருவாக்கவேண்டும் என துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

இலங்கை துறைமுக அதிகார சபையின் மாபொல துறைமுக மற்றும் சமுத்திரவியல் கலாசாலையின் கேட்போர் கூடத்தில் கொலந்தொட்ட மகளிர் தின கொண்டாட்டத்தில் பெண்களுக்கு அபிமானமிகு நாளைய தினம்' எனும் தொனிப்பொருளின் கீழ் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

குடும்பங்களை வலிமைப்படுத்தும் பிரதான தூண்டுகோள்களாகப் பெண்கள் உள்ளார்களென்றும், பெண்கள் வெளிநாடுகளில் அடிமைகளாக பணியாற்றி ஈட்டும் வருமானமே இந்நாட்டிற்கு கிடைக்கப்பெறும் அதிகூடிய வெளிநாட்டு வருமானமாகுமெனவும் ஒரு சிலர் வெட்கமின்றி கூறிக்கொள்கிறார்கள். தனிப்பட்ட முறையில் பெண்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பணம் ஈட்டுவதை நான் எதிர்க்கின்றேன். ஒரு நாடு முன்னோக்கிச் செல்ல பணம் அவசியம் என்ற போதிலும் எங்களுடைய பெண்களை விற்று அல்லது அவர்கள் மூலமாக பணம் ஈட்டுவதை நான் முழுமையாக எதிர்க்கின்றேன்.

நாம் பெண்களின் முக்கியத்துவத்தை அறிந்துக்கொள்வது மிக முக்கியமானதொரு விடயமாகும் அவர்களின் முன்னேற்றத்துக்கு நாம் வழிவிடவேண்டும். விசேடமாக உலக பொருளாதாரத்துடன் நாம் இசைவாக்கமடைய வேண்டும். தற்சமயம் நாம் எம்முடைய கலாசார விழுமியங்களைப் புறக்கணித்துள்ளோம். கடந்த காலங்களில் இந்நிறுவனத்தில் வேலைவாய்ப்புக்கு விண்ணப்பங்கள் கோரிய பொழுது, 90 சதவீதமான பெண்கள் விண்ணப்பங்களை அனுப்பியிருந்தார்கள். பெண்களை வேலைக்கு சேர்த்துக்கொள்ளும் பொழுது நடைமுறை பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும். அவர்களை இரவு வேளையில், காவலில் ஈடுப்படுத்த இயலாது. இறுதியாக பெண்களுக்கு ஒரு சில இட ஒதுக்கீடுகளை வழங்குவதற்கு நான் தீர்மானித்தேன்.

இல்லையேல் அவ்விடத்தில் பெண்களுக்கு அநீதியிழைக்கப்படும். இன்று பெண்கள் கல்வியறிவில் முன்னிலையில் உள்ளார்கள். நல்லதோர் சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டுமாயின் எதிர்வரும் காலத்தில் இந்நடைமுறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்' என்றார்.

# கிழக்கு பாடசாலைகளில் ஒலுவில் அல்ஹம்றா முதலிடம்

(இஸட். ஏ. றஹ்மான்-ஒலுவில்)

க.பொ.த உயர் தரப்பரீட்சையில் (கலை மற்றும் வர்த்தகம்) பிரிவுகளில் அதிக சித்திகளைப் பெற்ற பாடசாலை வரிசையில் ஒலுவில் அல்ஹம்றா மகா வித்தியாலயம் மாகாண மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் இருபதாவது இடத்தையும் பிடித்ததுள்ளதாக பரீட்சைத் திணைக்கள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப் பாடசாலையிலிருந்து 2016 ஆம் ஆண்டு கலை மற்றும் வர்த்தகப் பிரிவுகளுக்கு 35 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி 31 மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்கு தகுதி பெற்றுள்ளனர். இதில் வர்த்தகப்பிரிவுக்கு தோற்றிய மாணவர்களில் இரண்டு பேர் மூன்று பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

இப் பாடசாலையின் இச் சாதனை குறித்து கருத்துத் தெரிவித்த பாடசாலையின் அதிபர் அஷ்ஷெய்க் ஓ.அப்துர் றஹீம்(நளிமி) இவ் வெற்றிக்கு இறை உதவியுடன் மாணவர்களின் விடாமுயற்சி, ஆசிரியர்களின் அக்கறை, பெற்றோர்களின் தியாகம்,பாடசாலை அபிவிருத்திக் குழுவின் ஒத்துழைப்பு என்பன காரணிகளாகும் எனக் கூறினார்.

# அநுராதபுர மாவட்ட சு.க அமைப்பாளர்களும் ராவுத்தர் நெய்னா முஹம்மத் சந்திப்பு

(நாச்சியாதீவு பர்வீன்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஹக்கீமின் பணிப்பின் பேரில் அனுராதபுர மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தொகுதி அமைப்பாளர்களுடன் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ராவுத்தர் நெய்னா முஹம்மது சந்திப்பொன்றை மேற்கொண்டார். இந்த சந்திப்பானது அண்மையில் நாச்சியாதீவில் இடம்பெற்றது.



இந்த சந்திப்பின் போது அனுராதபுர மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸின் விரிவாக்கம் மற்றும் மீள்கட்டமைப்பு பற்றி விரிவாக பேசப்பட்டதோடு இந்த மாவட்டத்தின் அபிவிருத்தி, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள் என பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன .

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அமைச்சர் ஹக்கீம் அனுராதபுரத்திற்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது தொய்வடைந்துள்ள கட்சியின் வளர்ச்சி பற்றியும் கட்சியின் மீள்கட்டமைப்பு பற்றியும் தொகுதி அமைப்பாளர்களுடன் ஆலோசனை நடத்தினார். அதன் முதற்கட்டமாக அனுராதபுர மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ .சி .ராவுத்தர் நெய்னா முஹம்மது தலைமையில் கட்சியின் மீள்கட்டமைப்பு கூட்டம் நடைபெற்றது.

கட்சிக்காக கிராமங்கள் தோறும் கிளைகளை அமைத்தல், தொகுதிக்கு 500 இளைஞர்களை உள்வாங்குதல், பழைய போராளிகளை இனங்கண்டு அவர்களை கட்சியுடன் இணைத்து அவர்களை கௌரவித்தல், அபிவிருத்தி மற்றும் தொழில் வாய்ப்புக்களை வழங்கும் போது மாவட்ட அமைப்பாளரின் அங்கிகாரத்துடன் வழங்குதல் போன்ற முடிவுகள் தொகுதி அமைப்பாளர்களினால் முன்வைக்கப்பட்டு அவைகள் தீர்மானமாக அங்கு நிறைவேற்றப்பட்டன.

வீட்டுக்கு வீடு மரம் நடுதல் திட்டத்தை அனுராதபுரத்தில் செயற்படுத்துவது தொடர்பிலும் இங்கு ஆலோசிக்கப்பட்டது. கடந்த காலங்களில் முஸ்லிம் காங்கிரஸ் மாகாண சபையின் மூலம் இந்த மாவட்டத்திற்கு செய்த அபிவிருத்திப்பணிகள் , உரிமைகள் தொடர்பில் மேற்கொண்ட செயற்பாடுகள் போன்றே எதிர்வரும் காலங்களிலும் மக்களுக்கு சென்றடையும் விதத்தில் செயலாற்ற தொகுதி அமைப்பாளர்கள் இணங்கினர்

இந்த மாவட்டத்தின் மிகவும் முக்கிய பிரச்சினையாக இருக்கின்ற சிறுநீரக நோயினை கட்டுப்படுத்தும் வகையில் தூய்மையான குடிநீரினை அதற்கு பொறுப்பாக இருக்கின்ற கட்சியின் தலைவர் அமைச்சர் ஹக்கீமின் கவனத்திற்கு கொண்டு வந்து அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என அங்கு கருத்து முன்வைக்கப்பட்டது. விரைவில் அனுராதபுர மாவட்டத்து இளைஞர்களை ஒன்றிணைத்து இளைஞர் மாநாடொன்றை நடாத்துவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. கட்சியின் மனிதவளத்தின் முக்கியத்துவம் பற்றி ராவுத்தர் நெய்னா முகம்மது தெளிவுபடுத்தினார்.

மறுநாள் முஸ்லிம்கள் செறிவாக வாழுகின்ற நேகம, கலாவெவ, கனேவல்பொல போன்ற பிரதேசங்களுக்கு சென்று கட்சியின் மீள்கட்டமைப்பு தொடர்பாக கட்சியின் மூத்த ஆதரவாளர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்வதென முடிவெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அனுராதபுரம் வடக்கு தொகுதி சார்பில் முஹம்மத் முன்தீர், அனுராதபுரம் கிழக்கு தொகுதி சார்பில் ராஜமதுல்லாஹ், மிகிந்தலை தொகுதி சார்பில் ரபிக் ஆசிரியர், கலாவெவ தொகுதி சார்பில் பாஹிம் மற்றும் ரஷீத் ஆசிரியர், நௌபர், முஹம்மத் ராபி,கரீம் மௌலவி, நாச்சியாதீவு பர்வீன், ராபி ஆகியோர் கலந்துகொண்டனர் .

# திருமலையில் 40 மில். செலவில் மூன்று வீதிகள் புனரமைப்பு

(முள்ளிப்பொத்தானை நிருபர்)



திருகோணமலை ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூபின் வேண்டுகோளுக்கிணங்க சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் நிதியொதுக்கீட்டில் சுமார் 40 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட மூன்று வீதிகள் நேற்றுமுன்தினம் பொதுமக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டன.

திருகோணமலையிலுள்ள முக்கிய சுற்றுலாத்துறைப் பகுதிகளான கன்னியா வெந்நீரூற்று நிலாவெளி கடற்கரைக்குச் செல்லும் வீதிகளே இவ்வாறு புனரமைப்பு செய்யப்பட்டதாகும். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப், சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சின் செயலாளர் ஜானக சுகததாச, கிழக்குமாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் புஸ்பகுமார, கிழக்குமாகாண அமைச்சர் ஆரியவதி உட்பட பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின் பின் அமைச்சினால் திருகோணமலை மாவட்ட சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இவ்வருடத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

# கிண்ணியாவில் டெங்கு காய்ச்சலினால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கிண்ணியா நிருபர்)

கிண்ணியாவில் டெங்கு காய்ச்சலினால் குறிஞ்சாக்கேணியைச் சேர்ந்த எம்.ஹாலித் (வயது 43) நேற்று மரணமடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட இவர், கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணமடைந்துள்ளார்.

கிண்ணியாவில் டெங்குக் காய்ச்சல் காரணமாக மரணமடைந்தோரின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அந்நூர் பாடசாலை விவகாரம் வெறும் அரசியல் சித்து விளையாட்டு

## வலயக் கல்விப் பணிப்பாளர் ஹாசிம்

அட்டாளைச்சேனை அந்நூர் மகாவித்தியாலயத்தில் பெற்றோர்கள் சிலர் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். ஆனால் இந்த ஆர்ப்பாட்டம் ஏன் செய்கிறார்கள் எதற்காகச் செய்கிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியாத நிலமையில்தான் பெற்றோர்கள் கலந்து கொண்டிருக்கிருக்கிறார்கள் என்று அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.ஹாசிம் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை அந்நூர் மகாவித்தியாலயம் சிறந்த பாடசாலை அண்மித்த பாடசாலை திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருக்கும் நிலையில் அதனை வலயக் கல்வி பணிமனையால் தடுக்கப்பட்டுள்ளது என்று கூறி பெற்றோரை ஆர்ப்பாட்டத்தில் இறக்கியவர்கள் யார்? இவர்கள் ஏன் இப்படி செய்தார்கள் இதற்கான பின்னணி என்ன? என்பது கேள்வியாக இருக்கிறது.ஆனால் பாடசாலைகளுக்கு ஏதும் பிரச்சனை என்றால் அதுசம்மந்தமாக அதற்கான உயர் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு நடந்தவற்றை அல்லது பிரச்சனைகளைக் கேட்டறிய வேண்டும். மாறாக யாரிடமும் விசாரிக்காது கேள்விப்பட்டதை வைத்து ஆர்ப்பாட்டம் செய்தல் மாணவர்களின் கல்விக்கு இடைஞ்சலை ஏற்படுத்தல் என்பது கண்டிக்கத்தக்க விடயம்.

இது எந்தவித பிரச்சினைகளும் நடக்காத போது பிரச்சினைகள் நடந்தது போன்று சித்தரித்து மக்கள் முன்னிலையில் பெயர் எடுக்க பொய்களை சொல்லி வீண் வதந்திகளைப் பரப்பி அவர்கள் விரும்பியதை வென்றெடுக்கலாம் என்று செயற்படுகின்றனர். நாங்கள் அரச அதிகாரிகள், அரச நிருவாகம் செய்பவர்கள் அதனை உரிய முறையில் செய்வோம். ஆனால் அரசியல்வாதிகள் தங்களின் இருப்புக்களை நிலைநாட்ட நல்லவற்றை செய்வதை விடுத்து பொய்யான பிரசாரங்கள் மூலம் கல்வியில் விளையாட முனைதல் யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இப்பாடசாலை அமெரிக்க யுசைட் திட்டம் மற்றும் சிறந்த பாடசாலை அண்மித்த பாடசாலை திட்டத்தின் மூலமும் அபிவிருத்திக்காக உள்வாங்கப்பட்டிருக்கிறது. அத்துடன் ஒரே பாடசாலைக்கு இரண்டு திட்டங்கள் வழங்குவதில் ஏதும் சிக்கல் வரும் என்ற காரணத்தினால் 'ஏசு நிலையில் கிடைக்காவிட்டாலும் 'பிசு நிலை 'சிசு நிலை என்று அபிவிருத்திக்காக உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனை வித்தியாசமாக மக்களிடம் கூறி பிரச்சனைகளை உண்டாக்கி வலயக் கல்வி பணிப்பாளரை மாற்ற நினைப்போரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைய மக்களிடம் பொய் கூறுவோரின் நிலமைகளையும் மக்கள் அறிந்து செயல்படவேண்டும் என்றும் பணிப்பாளர் ஏ.எல்.எம்.ஹாஷிம் தெரிவித்தார்.

# அந்-நூர் வித்தியாலயத்திற்கு முன்பாக பெற்றோர், மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

## மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்கவில்லை



(அட்டாளைச்சேனை றியாஸ் ஆதம்)

அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலயமானது அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' எனும் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளமையைக் கண்டித்து பாடசாலைக்கு முன்பாக நேற்று இரண்டாவது நாளாகவும் பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்குறித்த அபிவிருத்தி திட்டத்தில் உள்வாங்கப்பட்ட தங்களது பாடசாலை அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளரினால் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பெற்றோர் நேற்றையதினம் தங்களது பிள்ளைகளை பாடாசாலைக்கு செல்ல விடாது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தங்களது நியாயமான கோரிக்கை தொடர்பில் இது வரையில் எதுவித உறுதிமொழிகளும் கல்வித்திணைக்களம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் வழங்கப்படாத நிலையில் சில அரசியல் தலைவர்கள் மட்டும் சம்பந்தப்பட்ட இடத்திற்கு வந்து சென்றுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

இப்போராட்டம் அரசியல் சார்ந்தது என வலயக்கல்விப் பணிப்பாளர் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்துக்கு தங்களது கண்டனத்தை தெரிவிப்பதாக கூறிய அவர்கள் இதில் எவ்வித அரசியலும் இல்லை எனவும் தங்களது சமூகம் மற்றும் மாணவர்களின் கல்வி சார்ந்த விடயம் எனவும் குறிப்பிட்டனர். மேற்குறித்த விடயம் பற்றி கருத்து தெரிவிக்க வேண்டிய வலயக் கல்விப் பணிப்பாளர் பொறுப்பற்ற விதத்தில் தேர்தல் பற்றி பேசுவது குறித்த விடயத்தினை திசை திசைதிருப்புவதற்கு எடுத்த முயற்சியாகும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் மேலும் தெரிவித்தனர்.

பல வளப்பற்றாக்குறையுடன் செயற்படும் இப்பாடசாலை முதலில் இத்திட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய ஒன்றே மாறாக இதனை புறக்கணித்து விட்டு இத்திட்டத்தில் உள்வாங்கப்பட்ட ஏனைய பாடசாலைகளில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படும் போதிலும், இப்பாடசாலையில் மாத்திரம் எந்தவித அபிவிருத்தி வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வருகை தந்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல் தவம் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி நல்லதொரு தீர்வினை பெற்றுத்தருவதற்கு முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.





# இந்து சமுத்திர பிராந்திய மாநாட்டில் ஜனாதிபதி

இந்து சமுத்திர பிராந்தியத்திலுள்ள நாடுகளின் பேண்தகு மற்றும் சமநிலையான அபிவிருத்தியை இலக்காகக்கொண்டு நடைபெறும் இந்து சமுத்திர பிராந்திய அரச தலைவர்கள் மாநாடு நேற்று இந்தோனேசியாவின் தலைநகரான ஜகார்த்தாவில் ஆரம்பமானது. இந்த மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டார்.

மாநாட்டுக்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இந்தோனேசியா ஜனாதிபதி ஜோக்கோ விடோடேர் வரவேற்றார்.

இந்து சமுத்திர பிராந்தியத்தைச் சேர்ந்த 21 நாடுகளின் அரச தலைவர்களும் பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் கலந்துகொள்கின்றனர். அவர்கள் இலங்கை ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

# இந்திய மீனவர் சுட்டுக்கொலை இலங்கை கடற்படை மறுப்பு

இந்திய மீனவர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டதாக கூறப்படும் தகவலை, இலங்கை கடற்படை பேச்சாளர், லெப்டினன் கொமான்டர் சமிந்த வலகுலுகே மறுத்துள்ளார்.

தமிழகத்தின் ராமேஸ்வர மாவட்டத்தின் தங்கச்சிமடம் பகுதியிலிருந்து கச்சதீவு அருகேவந்து மீன்பிடியில் பிரிட்கோ எனப்படும் மீனவர் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் சுடப்பட்ட நிலையில் இறந்துள்ளதாகவும், அவருடன் வந்த சரவணன் என்பவர் காயமுற்றுள்ளதாகவும் இந்திய மீனவ திணைக்களம் தெரிவித்திருந்தது.

மேலும் சில மீனவர்கள் காயங்கள் எதுவும் இன்றி அதிகாலை 12.30 அளவில் ராமேஸ்வரம் சென்றடைந்ததாக மீனவ சங்கத் தலைவர் நேற்றைய தினம் சுமார் 2000 ஆயிரம் மீனவர்கள் வரை குறித்த கடற்பிராந்தியத்தில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



அவ்வாறு மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டாலும் எச்சரிக்கை மாத்திரமே விடுக்கப்படும் எனவும் இலங்கை கடற்படையினர் யார் மீதும் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளவில்லை என கடற்படை பேச்சாளர் திட்டவட்டமாக மறுப்பு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களுக்கு துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டமை தொடர்பில் தீவிரமாக விசாரணைகளை முன்னெடுக்குமாறு மீன்பிடித்துறைகள் அமைச்சர் மஹிந்த அமரவீர பாதுகாப்பு அமைச்சருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

மேலும், இலங்கையிலுள்ள இந்திய தூதுவருடனும் இச்சம்பவம் தொடர்பில் அமைச்சர் கலந்துரையாடியுள்ளதோடு, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள சிநேகபூர்வமான உறவினை இவ்வாறான பிரச்சினைகள் மூலம் உடைத்தெறிவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## கோப் குழு பற்றிய... சட்டமா அதிபர் கடிதம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

கோப் குழுவின் அறிக்கை குறித்து சட்டமா அதிபரால் வழங்கப்பட்ட கடிதத்தை, சபாநாயகர் கரு ஜெயசூரிய நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

மத்திய வங்கியின் பிணை முறி மோசடிகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட கோப் குழுவின் அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மத்திய வங்கியின் பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த கோப் குழுவின் அறிக்கை கடந்த ஒக்டோபர் 28ம் திகதி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இதனையடுத்தே அந்த அறிக்கை, சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்காக பாராளுமன்ற சபாநாயகரால் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மத்திய வங்கியின் பிணை முறி மோசடி தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மஹேந்திரன் நேரடியான பொறுப்பேற்க வேண்டும் என்றும் அதன்படி அவர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோப் குழு அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

முறிகள் விநியோகத்துடன் நேரடி தொடர்புடைய ஏதேனுமொரு தரப்பு நட்டத்தை ஏற்படுத்தியிருந்தால், அந்தத் தரப்பிடம் இருந்து நட்டத்தை மீள அறவிட முடியும் என சட்ட மா அதிபர் தெரிவித்தார்.



ஈரான் பாராளுமன்றத்தின் அழைப்பினை ஏற்று அங்கு சென்ற சபாநாயகர் கரு ஜயசூரிய ஈரானின் கனிஷ்ட ஆன்மீக தலைவர் ஹோஜா கெல்சஸ்லம் சையிட் ஹசன் கொமையினியை சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம். அமைச்சர் பௌஸி உட்பட தூதுக்குழுவினரைப் படத்தில் காணலாம்.

## காணிகளை விடுவிக்குமாறு கோரி ஒத்திவைப்பு வேளை பிரேரணை

வட மாகாணத்தில் படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.இந்த ஒத்திவைப்பு வேளை பிரேரணை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் இன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வடக்கில் தனியாருக்கு சொந்தமான பாரியளவிலான காணிகள் 2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.குறித்த காணிகளில் பெரும்பாலானவை பாதுகாப்பு தேவைகளுக்காக பொது மக்களிடம் இருந்து எடுக்கப்பட்டவையாகும். இந்நிலையில் படையினர் வசமுள்ள தமது பூர்வீக காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி வடக்கில் மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், அரசாங்கம் இவ்விடயம் குறித்து துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென முன்வைக்கப்பட்டது. படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பெரும்பாலான காணிகள், பாதுகாப்பு தேவைகளுக்காக பொதுமக்களிடம் இருந்து எடுக்கப்பட்டவை. உதாரணமா க யுத்த காலத்தில் பலாலி விமானப்படைத் தளத்தை தாக்குதல்களில் இருந்து பாதுகாக்கும் நோக்கில் வலிகாமம் வடக்கில் வாழ்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் 25 வருடங்களுக்கு முன் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்கள் என சுட்டிக்காட்டினார். காணி விடுவிப்பு தொடர்பாக கடந்த 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதியால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக மக்கள் இரண்டு வருடங்களாக பொறுமை காத்த நிலையில், எவ்வித தாமதமும் இன்றி இம் மக்களின் காணிகளை உடன் கையளிக்குமாறு பிரேரணையில் குறிப்பிட்டார்.

# படுகொலை செய்யப்பட்ட பெண்ணை பட்டமளிப்புக்கு வருமாறு அழைப்பு

(ஏறாவூர் நிருபர்
-ஏ.எச்.ஏ. ஹுஸைன்)



மட்டக்களப்பு ஏறாவூரை அதிர்ச்சிக்குள்ளாக்கிய தாய், மகள் இரட்டைப் படுகொலைச் சம்பவத்தில் கொல்லப்பட்டவரான ஜெனீராபானு மாஹிர் (வயது 32) என்பரை பட்டமளிப்புக்கு சமூகமளிக்குமாறு கிழக்குப் பல்கலைக் கழகத்திலிருந்து வந்த அழைப்புக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டதும் தான் கதறி அழுததாக கணவர் மாஹிர் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர பிரதேசத்தில் முகாந்திரம் வீதி முதலாவது குறுக்கு ஒழுங்கையிலுள்ள வீட்டில் வசித்துவந்த தாயான நூர்முஹம்மது உஸைரா (வயது 56) அவரது திருமணமாகிய மகளான ஜெனீராபானு மாஹிர் (வயது 32) ஆகியோர் கடந்த செப்டம்பர் 11 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த சம்பவத்துடன் சம்பந்தப்பட்டதாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 6 பேரும் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றனர்.

இன்றையதினம் குறித்த சந்தேக நபர்கள் மீண்டும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ள நிலையில் படுகொலை செய்யப்பட்ட ஜெனீராபானுவின் பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கலைப்பட்டதாரியாக பட்டம் பெறவுள்ள தனது மனைவிக்குரிய கடிதம் மட்டும் தன் கைவசம் கிடைத்த போது மனைவியைக் கொன்றொழித்து விட்டார்களே என்றும் கணவன் எம்.ஐ.எம். மாஹிர் கதறினார். மனைவி படுகொலை செய்யப்பட்டிருக்கும் வேளையில் தனது கைக்குக் கிடைத்த பட்டமளிப்புக் கடிதத்தை எந்த முகவரிக்கு அனுப்புவேன் என்று கணவர் மாஹிர் முகநூலில் கவிதையொன்றை உருக்கமாக எழுதியுள்ளார்.

சர்வதேச பெண்கள் தினமான இன்று உன்னையும் உன் தாயையும் கொன்றொழித்த சந்தேக நபர்களுக்கான வழக்காம்.

08-04-2017 அன்று உனக்கு கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பட்டதாரியாக பட்டம் சூட்டப் போகின்றார்களாம்.

உன் அன்புக் கணவனாகிய எனக்கு மனசு கனக்கிறது.

வார்த்தைகள் பஞ்சமாகிறது
இது உனக்கு வந்த கடிதம்
முகவரி தெரியவில்லை எனக்கு,
உனக்கு
வந்த கடிதத்தை எங்கே அனுப்புவதென்று
விழித்திருந்து பரீட்சை எழுதி
எதிர்பார்த்திருந்தவள் நீ

இந்நிகழ்வுக்கு யார் யார் போவதென்று அன்றே தெரிவு செய்து மகிழ்ந்தவள் நீ

கறுப்பு மேலங்கி அணிந்து சான்றிதழ் பெறுவதை. கற்பனையில் எண்ணி சிறகடித்தவள் நீ.

படித்து பட்டம் பெற்றால் ஐபேட் வாங்கித்தருவீங்களா என்று சிறு பிள்ளையாய் என்னிடம் செல்லம் காட்டியது நீ.

ஒவ்வோரு பரீட்சைக்கும் ஆவலாய் இருந்த தாயை அழைத்துச் சென்று மனங்குளிரச் செய்தவள் நீ

உன் ஆசை, கற்பனையெல்லாம் கைகூடும் தருணத்தில்

இன்று முகவரி அற்றுப்போனாய் ! நான் என்ன செய்வேன். !!??

நான் எப்படி தெரியப்படுத்துவேன் உனக்கு. உன் கப்ரின் தலைமாட்டில் வைக்கிறேன் இந்த கடிதத்தை. முடிந்தால் எடுத்துச் சென்று பட்டம் பெற்றுக் கொள்,

08.04.2017 எதிர்பார்க்கிறேன் உன்னை.

இப்பொழுது கண்ணீரைத் தவிர வேறெதுவும் தெரியவில்லை எனக்கு.

என் துயரத்தை அறிவார்களா உன்னைக் கொன்று குவித்த துஷ்டர்கள். ?

யாஅல்லாஹ்! யா ரஹ்மானே! நீயே பெரியவன்.

## டெங்கு நோயால் கிண்ணியாவில் ஒருவர் பலி

(அப்துல்சலாம் யாசீம்-)

கிண்ணியா வைத்தியசாலையில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைபெற்று மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் நேற்று காலை உயிரிழந்துள்ளார். கிண்ணியா, குறிஞ்சாக்கேணி பகுதியைச்சேர்ந்த எம்.எல்.ஹாரிஸ் (41) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இதேவேளை திருகோணமலை கிண்ணியாவைச் சேர்ந்தவர்கள் டெங்கு நோயினால் இதுவரை ஐந்து பேரளவில் உயிரிழந்துள்ளனர்.

## தெரணியகலயில் கத்திக்குத்து சிறுமி உட்பட இருவர் பலி

தெரணியகல, மாகல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு ஏழுவயதான பெண் பிள்ளையும், 45 வயதான நபரொருவரும் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

குறித்த பிரதேசத்தில் தாய் ஒருவரும் அவரின் 7 வயது மகளும் மற்றும் 45 வயதுடைய உறவினர் ஒருவரும் இருந்துள்ளதோடு, இனந்தெரியாத நபர் ஒருவர் அவ்வீட்டிற்கு வந்து கூரிய ஆயுதத்தினால் தாக்கியுள்ளார்.

குறித்த தாக்குதலில் மகளும், நபரும் உயிரிழந்துள்ளதோடு, கடுங்காயங்களுக்குள்ளான தாய் அவிஸ்ஸாவெல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, மேலதிக சிகிச்சைகளுக்கு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் சந்தேகபர் இனங்காணப்பட்டுள்ளதோடு, அவர், பிரதேசத்திலிருந்து தலைமறைவாகி உள்ளார் என்றும், அவரை கைதுசெய்வதற்கான நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டது.

**2015 இல. 05 என்ற ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தினை மீறிய தவறு தொடர்பில் பொது மக்களிடம் மன்னிப்பு கோரல்**

பாணந்துறை மேலதிக மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தின் வழக்கு இல. 42706க்கு ஏற்ப, பாணந்துறை, பள்ளிமுல்லை துறைமுக வீதி இல. 503 என்ற முகவரியில் வசிக்கும் மல்வா ஹந்திகே கதத் பிரியசாந்த என்ற என்னால்,

1. சட்டவிரோதமாக இந்த நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவு செய்யப்படாத Tramadol-X225 என்ற மருந்து வில்லைகள் 43ஐ கைவசம் வைத்திருந்தமை மற்றும்,
2. உத்தியோகபூர்வ அனுமதிப் பத்திரமின்றி Tramadol-X225 என்ற 43 மருந்து வில்லைகளை வைத்திருந்தமையினாலும்

தவறு இழைத்துள்ளேன். இந்தத் தவறு காரணமாக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியம் தொடர்பில் நான் மன்னிப்புக் கோருகிறேன்.

அத்தோடு, இதற்கு பிறகு மேற்சொன்ன தவறையோ ஔடத ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் எந்தத் தவறையோ செய்ய மாட்டேன் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

(ஹசித ஸ்ரீமால் இல. 507, காலி வீதி, மொரட்டுவை)

**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு**

**கேள்விமனு கோரல்**

**கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய (சதொச) தலைமையகம் மற்றும் மெக்கலம் களஞ்சிய தொகுதிகளில் சிற்றுண்டிசாலை சேவைகளை பராமரித்தல்**

கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய (சதொச) மற்றும் அதிலுள்ள மெக்கலம் களஞ்சிய தொகுதிகளின் சிற்றுண்டிச்சாலை சேவைகளை பராமரிப்பதற்கு, இவ்வாறான சேவைகளை பராமரித்தல் / நடாத்தலில் நல்ல அனுபவமுள்ள, ஆதார சான்றிதழ்கள் உள்ள தகுதிவாய்ந்த மனுதாரரிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கேள்வி விண்ணப்பங்களுடனான முழுமையான விபரங்களை, (13.03.2017) திகதி, 13.00 மணி வரையிலும், மீளளிக்கப்படாத 2,000 ரூபாவை (இரண்டாயிரம் ரூபா) கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய (சதொச) காசாளரிடம் செலுத்தி, கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய (சதொச) தலைமையகத்தின் 07 ஆம் மாடியில் உள்ள சேவைகள் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாக பூரணப்படுத்தப்பட்டு, முத்திரையிடப்பட்ட கேள்விமனுக்கள், கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய (சதொச) தலைமையகத்தின் 07 ஆம் மாடியில் வைக்கப்பட்டுள்ள 20 ஆம் இலக்க கேள்விமனு பெட்டியில், 13.03. 2017 ஆம் திகதி 14.00 மணிக்கு முன்னர் இடப்பட வேண்டும். கேள்விமனுக்கள் கிடைக்கப் பெற்றதும், இதே இடத்தில் உடனடியாக திறக்கப்படும்

**தலைவர்,**
**கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்,**
**27, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு 02.**

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
08TH MARCH 2017 - WEDNESDAY

# அரபுக் கல்லூரிகள் வக்பு சபையில் பதிவு செய்யப்படுவது அவசியமாகும்

நாட்டின் அரபுக் கல்லூரிகளை வக்பு சபையின் கீழ் பதிவு செய்வதன் அவசியத்தை வக்பு சபையின் தலைவர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். யாஸின் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் 280 அரபுக் கல்லூரிகள் இருக்கின்றன. இக்கல்லூரிகள் எதுவும் வக்பு சபையின் கீழ் பதிவு செய்யப்படவில்லை என வக்பு சபையின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வக்பு சபையின் கீழ் இவை பதிவு செய்யப்படாத போது இந்த அரபுக் கல்லூரிகளின் நிதிக் கொடுக்கல் வாங்கல்களை பரிசீலிப்பதில் சிக்கல்கள் உள்ளன.

இவ்வாறு பதிவு செய்வதன் மூலம் அரபுக் கல்லூரிகளுக்குரிய சொத்துக்கள் வக்புச் சொத்துக்களாக மாறுகின்றன. அதன்மூலம் சொத்துக்களுக்கு பாதுகாப்பு கிடைக்கின்றன.

சில அரபுக் கல்லூரிகளின் நிதி கையாளுதல் தொடர்பாக விமர்சனங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது. அரபுக் கல்லூரிகளது நற்பெயருக்கு இது களங்கத்தை ஏற்படுத்தலாம்.

அரபுக் கல்லூரிக்கு வசதிபடைத்தவர்கள் நிதி உதவிகளை வழங்குவது தூய நோக்கத்துடனாகும். இந்த தூய நோக்கம் சிலரது தகாத செயற்பாடுகளால் மாசுபடுத்தப்படுகிறது.

அரபுக் கல்லூரிகள் எவ்வித கண்காணிப்பும் இன்றி இயங்கி வருவதாக நாட்டின் உயர் மட்டத்திலுள்ளோர் சிலர் அண்மையில் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்த விடயத்தில் முஸ்லிம் சமய விவகார அமைச்சு கூடுதலான கரிசனை காட்டுவது அவசியமாகும்.

அவ்வாறு கூறுவதற்கு காரணம் என்ன என்று தேடிப்பார்ப்பது நல்லது. இந்த விடயத்தில் முஸ்லிம் சமய விவகார அமைச்சின் ஈடுபாடு போதுமானதாக இல்லை என்றே கூறப்படுகின்றது.

வக்பு சபையின் கீழ் அரபுக் கல்லூரிகளுக்காக பொறுப்பான அலகு ஒன்றை உருவாக்கி அவை மேற்பார்வை செய்யப்படுவதன் மூலம் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படுவதனைத் தவிர்க்கலாம்.

இப்போது நாட்டில் தகவல் அறியும் சட்டம் அமுலிலுள்ளது. இச்சட்டத்தின் மூலம் இக்கல்லூரிகள் பற்றி எவரும் கேள்வி எழுப்பும் நிலையும் ஏற்படலாம்.

எனவே, அரபுக் கல்லூரிகளது செயற்பாடுகள் குறித்து பகிரங்கத் தன்மை பேணப்படுவது அவசியமாகும்.

ஒரு சில அரபுக் கல்லூரிகளது செயற்பாட்டினால் நாட்டில் இயங்கும் சகல அரபுக் கல்லூரிகளுக்கும் அவப்பெயர் ஏற்பட இடமுண்டு. இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்தின் ஆத்மீக வளர்ச்சிக்கும் அரபுக் கல்லூரிகள் அளப்பரிய பங்களிப்புச் செய்துள்ளன. செய்து வருகின்றன.

இப்போது நாட்டில் நிலவும் நல்ல சூழல் என்றும் இருக்கும் என்று கூற முடியாது. எனவே, வக்பு சபைத் தலைவர் கூறியிருப்பது போன்று சகல அரபுக் கல்லூரிகளும் வக்பு சபையின் கீழ் பதிவு செய்வதற்கு முஸ்லிம் சமய விவகார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த விடயத்தில் முஸ்லிம் சமய விவகார அமைச்சுக்கு பாரிய பொறுப்புள்ளது என்பதனை நினைவுபடுத்த விரும்புகிறோம்.

---

# ரூபாவிற்கு என்ன நடக்கின்றது?

**வின்சன் மேர்வின் பெர்னாண்டோ**
*(பிரபல பொருளாதார நிபுணர்)*

இலங்கையின் வெளிநாட்டு செலாவணி விகிதாசாரம் அதாவது உள்நாட்டு பணத்தின் வெளிநாட்டு பெறுமானம் டொலருக்கு சமாந்தரமாக இப்போதாகும்போது 153 ரூபாவாக உள்ளது. அது 2016 ஆம் ஆண்டின் இறுதியில் 155 ரூபாவாக இருந்தது. இந்த பெறுமானம் 2014ஆம் ஆண்டு 134 ரூபாவாக இருந்ததோடு அந்த பெறுமானம் வீழ்ச்சி கண்டது 2015இல் ஒரு டொலர் 144 ரூபாவாக அமைந்ததனாலாகும். சுதந்திரத்தின் பின் ரூபாவின் வெளிப்பெறுமதி 46 சதவீதமாக அதாவது வெட்டித் தெறிபடும் வகையில் பெறுமானம் குறைந்த 1977 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மிதக்கும் செலாவணி முறை அறிமுகப்படுத்தப்பட்டதுமுதலாகும். அதற்கு முன்பு இருந்தது (1968 - 77 ) பல்வித செலாவணி விகிதாசார முறையாகும். அக்காலத்தில் ஒரு டொலர் ரூபா 5 முதல் 15 ரூபாவாக இருந்தது.

1950 முதல் 68 வரை டொலர் 4 ரூபாவுக்கும், 5 ரூபாவுக்குமிடையே இருந்தது. இதன்படி சுதந்திரத்திற்குப் பின் இலங்கையில் பின்பற்றப்பட்ட நிலையான, பலவித நிர்ணயித்த மற்றும் மிதக்கும் செலாவணி விகிதாசார முறையின் கீழ் டொலருக்கு சமாந்தரமாக ரூபாவிற்கு பெறுமதி, ஒன்றில் பெறுமதி இழந்தது, அவ்வாறு இல்லாவிடில் மீள்பெறுமானம் பெற்றது. இன்னுமொரு கட்டத்தில் அதன் பெறுமானம் குறைந்தது. மற்றொரு கட்டத்தில் அதன் பெறுமானம் அதிகரித்தது. எனினும் 2014 முதல் இதுவரை டொலருக்கு சமாந்தரமாக ரூபாவின் பெறுமதி 131 ரூபாவிலிருந்து 155 ரூபா வரை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. ரூபாவின் பெறுமதி குறைவது சாதாரண ஒரு விடயமாக இருந்தாலும், அது இன்றாகும்போது மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாக குரலெழுப்பப்படுகிறது. இது தொடர்பாக பொருளாதார ரீதியான ஒரு பார்வையைச் செலுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

செலாவணி விகிதாசாரம் என்பது இரண்டு வகையான பணங்கள் பரிமாற்றப்படும் அல்லது விகிதாசாரம் அல்லது ஒவ்வொரு பண அலகினதும் விலையை மற்றொரு பண அலகினால் தெரிவிப்பதாகும். இதன்படி ஏதாவது ஒரு பண அலகு இரண்டிற்கிடையில் செலாவணி விகிதாசாரத்தை இரு வகையில் வெளியிடலாம். உதாரணமாக ஒரு டொலரை 155 ரூபாவாகவோ அல்லது ரூபாவை டொலர் 0.007 சதமாகவோ குறிப்பிடலாம். எனினும் எல்லோரும் பழக்கப்பட்டிருப்பது டொலர் ஒன்றின் பவுண் ரூபா அல்லது பவுண் யூரோ என அழைப்பதற்காகவாகும். 2014ஆம் ஆண்டு முதல் 2017 ஆரம்பம் வரை இலங்கை கொடுக்கல் வாங்கல் செய்யும் பிரதான நான்கு பண வகைகளின் மாற்றம் ஏற்பட்ட முறை அருகில் இருக்கும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.






| நிதி | 2014ஆம் ஆண்டின் சாதாரண பெறுமதி | 2017 மார்ச் 1ஆம் திகதி | கூடுதல் குறைதல் ரூபா |
|---|---|---|---|
| 1 டொலர் ரூபா | 130.56 | 153.31 | +22.75 |
| பிரித்தானிய பவுண் ரூபா | 215.16 | 190.78 | -24.38 |
| 1 யூரோ ரூபா | 173.47 | 163.11 | -10.36 |
| 1 ஜப்பான் யென் ரூபா | 1.24 | 1.37 | +0.13 |

இதிலிருந்து தென்படுவது என்னவென்றால் டொலருக்கும் ஜப்பான் யென்னுக்கும் சமாந்தரமாக ரூபாவின் பெறுமானம் வீழ்ச்சிகண்டுள்ளதோடு பவுண் மற்றும் யூரோ அலகுகளுக்கு சமாந்தரமாக பெறுமானம் அதிகரித்திருப்பதாகும்.

அடுத்த முக்கிய விடயம். இந்த செலாவணி விகிதாசாரம் எப்படி தீர்மானிக்கப்படுவது என்பதாகும். நாடொன்று பின்பற்றுகின்ற செலாவணி விகிதாசார அடிப்படையிலேயே அது தீர்மானிக்கப்படுகிறது.

இலங்கையின் சுதந்திரத்தின் பின் 1948 - 67 வரை பிரேட்டன் வூட்ஸ் முறை (பிரித்தானிய பவுண் தொடர்பான நிலையான செலாவணி விகிதாசார முறை) 1968 -77 வரை பல்வித விகிதாசார முறை அதாவது உத்தியோகபூர்வ செலாவணி விகிசாதார முறையோடு வெளிநாட்டு விகிதாசார உரிமைச் சான்றிதழ் பத்திரம் 1977 - 2001 வரை நிர்ணயித்த மிதக்கும் விகிதாசார முறை (அதாவது வெளிநாட்டு செலாவணி கோரிக்கை மற்றும் வளங்களுக்கேற்ப வெளிநாட்டு செலாவணி விகிதாசாரத்தை தீர்மானிப்பதற்கு இடமளித்து அதற்கு மத்திய வங்கி தலையிட்டு உரிய பொருத்தப்பாடுகளை செய்தல்) 2001 - 2009 வரை தூய மிதக்கும் விகிதாசார முறை (அதாவது மத்திய வங்கி தலையிடாது வெளிநாட்டு செலாவணி கேள்வி மற்றும் வளங்களின் அடிப்படையில் செலாவணி விகிதாசாரத்தை தீர்மானிக்க இடமளித்தல்) 2010 - 12 வரை மீண்டும் மிதக்கும் முறையை பின்பற்றி 2012 இல் 2ஆவது முறையாக ரூபாவை மிதக்கும் செலாவணி விகிதாசார முறைக்கேற்ப தீர்மானிப்பதற்கு இடமளித்து மீண்டும் மத்திய வங்கியின் தலையீட்டில் ரூபாவின் பெறுமதியை தீர்மானித்தல் போன்ற வகையில் அடிக்கடி கொள்கை மாற்றங்களின் மத்தியில் ரூபாவின் பெறுமானம் தீர்மானிக்கப்பட்டது.

வெளிநாட்டு செலாவணி கேள்விக்குள்ளாவது ஏற்றுமதி சேவை கொடுப்பனவு, கடன் செலுத்தல், போன்ற வெளிநாட்டு செலாவணி கொடுப்பனவுகளின்போதாகும். வெளிநாட்டு செலாவணி வழங்கலுக்கு உள்ளாக்கப்படுவது இறக்குமதி சம்பாதிப்பு உட்பட சகல வெளிநாட்டு செலாவணிகளும் கிடைக்கும்போதாகும். கிடைக்கின்றவற்றை விட செலுத்துதல் அதிகரிக்கும் போது வெளிநாட்டு செலாவணியின் விகிதாசாரத்தின் பெறுமானம் சீர்குலையும். இன்றாகும் போது அதுவே ஏற்பட்டிருக்கின்றது. இந்த சீரழிவை குறைத்துக்கொள்ளக்கூடியது வெளிநாட்டு செலாவணி சந்தைக்கு மத்திய வங்கி வெளிநாட்டு ஒதுக்கினை விற்பனை செய்வதன் மூலமாகும். 2010 - 2012 வரை மத்திய வங்கி 3.5 பில்லியன் டொலரை தனது ஒதுக்கிலிருந்து சந்தைக்கு விற்றது. அக்காலகட்டத்தில் இலங்கை மத்திய வங்கியில் இருந்த வெளிநாட்டு ஒதுக்கு 8 பில்லியன் டொலராகும். அந்த தொகை சாதனை மட்டத்திலான தொகையாக இருந்ததினால் அதனை விற்பனை செய்வதனை தவறாகக் கருத முடியாது. அவ்வாறு விற்பனை செய்து தொடராக வெளிநாட்டின் ஒதுக்கினை குறைத்துக்கொள்வது நல்லதல்ல என்பதனை விளங்கிக்கொண்டு மீண்டு 2012 பெப்ரவரியில் ஒரு டொலர் 114.60 ஆக குறைக்கப்பட்டது. மீண்டும் ரூபாவின் பெறுமதியை சுதந்திரமாக தீர்மானிப்பதற்கு இடமளிக்கப்பட்டது. இதனை இலங்கையில் 2ஆவது முறையாக மிதக்கும் செலாவணி விகிதாசார முறை செயற்படுத்தல் என அறிமுகப்படுத்தலாம். அதன்படி சென்ற 2012 ஆம் ஆண்டு இறுதியில் 127 ரூபாவாகவும், 2013இல் 131 ரூபாவாகவும், 2014 இல் 131 ரூபாவாகவும் இருந்தது. 2012 - 14 வரை சென்மதி நிலுவையும் மொத்த மிகுதியின் பணப் பெறுமானத்தை மதிப்பிடல் ரூபாவின் பெறுமானம் நிலையானதாக இருப்பதற்கு ஒரு காரணியாகியதோடு வெளிநாட்டு ஒதுக்கு கூடிய மட்டத்தில் இருந்ததனால் மத்திய வங்கி தேவைப்படும்போது வெளிநாட்டு ஒதுக்கினை சந்தைக்கு விற்பதன் மூலம் அந்த ஸ்திரத் தன்மையை ஏற்படுத்தியது.

2015ஆம் ஆண்டு இலங்கையின் மொத்த மிகுதி 1489 மில்லியன் டொலராகவும், பற்றாக்குறை ஏற்பட்டது பற்றி அறிவிக்கப்பட்டதாலும், சராசரி உத்தியோகபூர்வ ஒதுக்கு முறையில் பலவீனம் காரணமாகவும், வெளிநாட்டு ஒதுக்கினை விற்பனை செய்து ரூபாவின் பெறுமதியை பாதுகாக்க முற்படுவது ஆபத்தானது என்பதனை விளங்கிக்கொண்டார்கள். அது சர்வதேச நிதியத்தினதும் வேண்டுகோளாக இருந்தது. எனவே ரூபாவின் வெளிப்பெறுமானத்தின் ஸ்திரத்தன்மையை பேணுவதன் தேவை அரசுக்கு இருந்தாலும் பொருளாதார காரணிகளால் அவ்வாறான ஒன்றை செய்வது கஷ்டமாக இருந்தது. இன்று டொலருக்கு சமாந்தரமாக ரூபாவின் பெறுமதி பெருமளவில் வீழ்ச்சி கண்டிருப்பதற்கு காரணம் அதுவே. முன்வரும் சில மாதங்களில் இலங்கை செலுத்த வேண்டிய பாரிய வெளிநாட்டு கடன் தொகையின் அளவுடன் ரூபாவின் பெறுமதியை சுதந்திரமாக தீர்மானிப்பதற்கு இடமளிப்பது தவிர வேறு மாற்று வழிகள் எதுவும் இல்லை.

இந்த நிலைமை அமெரிக்காவின் ட்ரம்பின் ஆட்சியின் பின்பு உலகின் பல நாடுகள் எதிர்கொண்டிருப்பதனை காணக்கூடியதாக இருக்கிறது. 2016 செப்ரெம்பர் 25 தாய்லாந்தில் 1 டொலர், 34.58 தாய் பாத் ஆக இருந்தது. 2016 டிசம்பர் 27இல் அது 36.02 ஆகியது. (3 மாதத்திற்குள்) இந்தியாவில் 2010 - 11இல் ஒரு டொலருக்கு 66.19 ரூபாவாக இருந்தது. 2016.11.24இல் அது 68.71ஆக இருந்தது. சீனாவில் 2016.செப்ரெம்பர் 07ஆம் திகதி ஒரு டொலருக்கு 6.6 யூவான் இருந்தது. 2017 ஜனவரியில் 7.0 வரை அதன் பெறுமதி குறைந்தது. மலேசியாவின் ரிங்கிட் இக்காலகட்டத்துள் 4 இல் இருந்து 4.5 ஆக வீழ்ச்சி கண்டது. இதன் அடிப்படையில் இலங்கையில் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி காண்பதற்கு உள்ளக சர்வதேச காரணங்கள் பல காரணிகளாக இருந்துள்ளன. இதிலிருந்து மீழ்ச்சி பெறுவதற்கு ஏற்றுமதி மேம்பாடு, வெளிநாட்டு செலாவணி மேம்பாடு மூலம் இலங்கையின் வெளிநாட்டு துறையைப் பலப்படுத்துவதன் மூலம் மட்டுமே செய்ய முடியும் என்பதை இறுதியில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

---

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

**மேலதிக விபரங்களுக்கு**

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# திருகோணமலை மக்கெய்சர் மைதான நிர்மாணப்பணிகளை மீண்டும் ஆரம்பிக்குக

## நீதவான் ஹம்ஸா உத்தரவு

**(திருகோணமலை அப்துல்சலாம் யாசீம்)**

கடந்த 2014ஆம் ஆண்டு 02-13ம் திகதி திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரினால் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு நேற்று திருகோணமலை நீதவான் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் இந்த வழக்கு ஏற்கனவே முன்னைய நீதவானினால் ஆரம்பிக்கப் பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. இந்த விசாரணையானது கட்டிட நிர்மாண வேலைகளின் போது சந்தேகத்திற்கிடமான மனித எழும்புக்கூடு கள் வெளியானது தொடர்பாக ஏற்பட்ட விசாரணையாகும்.

இந்த மைதானத்தை சர்வதேச தரத்திற்கு தரமுயர்த்துவதற்காக உள் கட்டுமான வெளிக்கட்டுமான வேலைகளை ஆரம் பித்த சந்தர்ப்பத்தில் கட்டிட நிர்மாண வேலைகளை செய்கின்ற போது மனித எழும்புக்கூடுகளின் பகுதிகள் குறித்த குழிகளிலிருந்து தென்பட்டன.

இவ்விடயமாக பொலிஸாருக்கு முறை யிடப்பட்டிருந்தது. குறித்த முறைப்பாட் டினை விசாரணை செய்வதற்காக நீத வான் 2014-02-13ஆம் திகதி இந்த சந்தேகத்திற்கிடமான புதைகுழியை பார்வையிட்டு மேலதிக கட்டளை பிறப்பிக்கப்படும் வரை அனைத்து கட்டிட வேலைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என கட்டளை பிறப்பித்திருந்தார்.

அதன் பின்னர் அனைத்து கட்டிட வேலைகளும் இடை நிறுத்தப்பட்டு. சந்தேகத்திற்கிடமான புதை குழி தோண்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு. நீதவான் முன்னிலை யில் பல எலும்புக்கூட்டு பாகங்கள் பெறப்பட்டு இலங்கையிலுள்ள முக்கியமான பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு மேலதிக பரிசோதனை செய்யப் படும் இந்த எலும்புக்கூடுகள் எந்த காலப்பகுதியில் இறந்த எழும்புக் கூடுகள் என்ற விடயம் நிரூபிக்கப் பட முடியாத நிலைமை காணப்படுகின்றது. ஏற்கனவே இடப்பட்ட அறிக்கையிலும். பொலிஸாரின் சமர்ப்பணத்திலும் ஏற்கனவே இந்த பகுதி பிரித்தானியர் ஆட்சி காலத்தின் போது பிணங்கள் புதைக்கப்படும் மயானமாக இருந்த ஒரு இடம் என்ற கருத்தும் நீதிமன்றத்திற்கு தெரியப் படுத்தப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே குறித்த புதைகுழியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட மனித எலும்பு எச்சங்கள் மேலதிக விசாரணைக்காக அதாவது குறித்த எலும்புக்கூடுகளின் வயதெல்லை மற்றும் அதன் தன்மை தொடர்பான விசாரணைக்காக கலிபோர்னியா ஆய்வகத்திற்கு அனுப்பி அது தொடர்பான முடிவுகளைப்பெற வேண்டுமென நீதிமன்றுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இருந்த போதும் அவ்வாறு ஆய்வுகள் செய்து முடிவினை பெறுவதற்கு கோடிக்கணக்கில் பணம் செலவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.

இந்த பணச்செலவினை ஈடு செய்வதற்கு அரசாங்கத்திடமிருந்து பணத்தை ஒதிக்கீடு செய்யப்படாமையும் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இருந்தபோதிலும். மனித எலும்புகள் கண்டடுக்கப்பட்டமையினால் குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் நீதவானினால் நியாயமாக எழுந்துள்ளது.

அதாவது கொலை செய்யப்பட்டவர் கள், குற்றங்கள் இழைக்கப்ட்டு அதன் பிரகாரம் இறந்திருக்கலாம் என்கின்ற சந்தேகம் எழுகின்ற சந்தர்ப்பத்தில் இது சம்பந்தமான உண்மையை கண்டு பிடிக்க வேண்டியது நீதிமன்றத்தின் கடமையாக இருக்கின்றது

அதேநேரம் மக்களுடைய அடிப்படை உரிமையான விடயத்தை நீதிமன்றம் கவனத்தில் எடுக்க வேண்டும். இந்த விளையாட்டு மைதானத்தில் சர்வதேச ரீதியான விளையாட்டு போட்டி நடைபெறவிருப்பது ஒரு முக்கிய நிகழ்வாகும். நீதிமன்றத்திற்கு அதிகாரம் கிடைப்பது மக்களின் இறைமையில் இருந்தேயாகும். மக்களின் இறைமை என்பது ஒரு விசாலமான கருப்பொருள் மக்களின் அபிலாஷைகள் அடிப்படை உரிமைகளின் மாற்றமாக அரசின் கருவி கள் செயற்பட முடியாது. மக்களின் அடிப்படைத்தேவை, சுகாதாரம், விளையாட்டு போன்ற விடயங்களில் நீதிமன்றம் அக்கறையாக செயற்பட வேண்டுமென நான் கருதுகிறேன்.

பாரிய சனத்திரள் ஒன்று மைதானத்திற்கு சமூகமளிக்க இருப்பதினாலும் ஏற்கனவே பாதுகாப்பற்ற முறையில் முடிக்கப்படாத கான் தொகுதி அமைந்து காணப்படுகின்றன.

எனது கள விஜயத்தின் போது காணக்கூடியதாகவுள்ளது. சனத்திரளின் போது சிறுவர்கள் பெரியவர்கள். வயது முதிர்ந்தவர்கள் மைதானத்திற்கு சமூகமளிக்கும் சந்தர்ப்பத்தில் சன நெரிசலில் குறிப்பிட்ட கான் தொகுதியில் விழுந்து காயமேற்படும் என்பது மிக துல்லியமான ஒரு விடயமாக காணப்படுகின்றது.எனவே நீதவானினால் ஏற்கனவே குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவைப்பிரிவு 124 இற்கு அமைவாக கட்டளையொன்று ஆக்கப்பட்டிருக்க வேண்டும். அது பொலிஸாரின் விசாரணைகளுக்கு அனுச ரனை வழங்குவதற்கு வழங்கப்பட்ட கட்டளையாகும்.

குறித்த தரப்பினரே இந்த விண்ணப் பத்தை செய்கின்ற போது. குறித்த இடத்தின் கான் தொகுதிகளை திருத்தி யமைப்பதற்காக வேலைகளை தொடங்குவதால் மனித எலும்புகள், எச்ச ங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என தெரிவிக்கின்றார்கள்.

எனது கள விஜயத்தின் போதும் கான் தொகுதி அமைந்திருக்கின்ற இடமும் புதைகுழி தோண்டப்பட்ட இடமும் வேறு வேறாக காணப்படுவதுடன் மீண்டும் புதை குழி தோண்டப்படுகின்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் கான் தொகுதி வேலைகளை முன்னெ டுத்து செல்வதால் எந்த பாதிப்பும் ஏற்படாது என மன்று திருப்தியடைகின் றது. எனவே, ஏற்கனவே மன்றினால் விதிக்கப்ட்டிருந்த கட்டளையை நீக்காது அதே நேரம் கான் தொகுதியினுடைய புணர் நிர்மான வேலைகளை செய்வதற்கு மாத்திரம் அனுமதி வழங்கி கட்டளை பிறப்பிக்கின்றேன். அதாவது ஏற்கனவே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற மனித எலும்புகள், எச்சங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு பாதகம் ஏற்படாத வகையில் கான் தொகுதிக்கான புணர்நிர்மானங்களை செய்வதற்கும் ஏற்கனவே புதைகுழி அமைந்துள்ள இடங்களை பாதுகாப்பான மறைப்பு கவச ங்களை இட்டு ஆவரனை செய்யு மாறும் திருகோணமலை நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டார்.



ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத் திருகோணமலை மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்த இரண்டாம் கட்ட டெங்கு ஒழிப்பு களப்பணி கிண்ணியா பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது, இதில் பெருந்தொகையானவர்கள் கலந்து கொண்டு வீடுகளுக்குச் சென்று டெங்கு நுளம்புகளை உண்டு பண்ணும் குப்பைக்கூளங்களை அகற்றி சுத்தம் செய்தனர்.

## ஸ்டார் ராசிக் மறைவுக்கு இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் அனுதாபம்

சமூகத் சிந்தனையுடன் தனது பேனாவைப் பயன்படுத்திய ஓர் ஊடகவியலாளரே ஸ்டார் ராசிக் என முன்னாள் ஊடக அமைச்சரும் தேசிய ஊடக மையத்தின் தலைவருமான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

மூத்த ஊடகவியலாளர் ஸ்டார் ராஸிக்கின் மறைவு குறித்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மறைந்த ஊடகவியலாளர் ஸ்டார் ராசி க் சமூகப் பணிகளில் தீவிர அக்கறை காட்டிய ஒருவர். மர்ஹூம் ஏ.சி.எஸ். ஹமீதுடன் நெருங்கிச் செயற்பட்ட இவர், கண்டி மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தில் முக்கிய பதவிகளை வகித்து மாவட்ட இளைஞர் அபிவிருத்திக்காக உழைத்தார்.

அன்னாரின் பாவங்களை மன்னித்து ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கம் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

## நூல் வெளி யீட்டு விழா

தோழர் எம்.ஆர். ஸ்டாலின் எழுதிய கிழக்கின் சுயநிர்ணயம் நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை (10) இரவு 8.00 மணிக்கு காத்தான்குடி, கடற்கரை வீதி, அல் மனார் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வு உரையாடலுக்கும் ஆய்வுக்குமான மையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் சி ராஜ் மஷ்ஹூரின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நூலில் கிழக்கு மாகாணம் வடக்குடன் இணைக்கப் படாமல், தனித்தே இருக்க வேண்டும் என்பதை வரலாற்றுச் சான்றுகளுடன் வலியுறுத்தப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

LAKSALA
State Gift & Souvenir Boutique
All of Sri Lanka

**கைத்தொழில் வணிக அமைச்சு**
**லக்சல**
**இலங்கை கைவினை சபை**

சுய நிதியைக் கொண்ட அரச வர்த்தக நிறுவனமான, இலங்கை கைவினைப் பொருட்கள் சபை, கிராமிய பொருளாதாரத்தை தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் பலப்படுத்துகின்ற வகையில், புதுமையான உற்பத்திகளை கொண்டு வருவதற்கு கிராமப்புற கைவினைஞர்கள் மற்றும் தொழில்முனைவாளர்களுக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்துகின்றது.

லக்சலவுடன் இணைந்து, தமது வியாபார பெயர்களை ஊக்குவிக்க விரும்புகின்ற உள்நாட்டு கம்பனிகளிடமிருந்து, வியாபார முன்மொழிவுகள் கோரப்படுகின்றன ; முழு இலங்கையும் கட்டண பங்கீடு அடிப்படையில்.

**விதிமுறைகளும் நிபந்தனைகளும்**

- கைவினைப் பொருட்கள், மாணிக்கம் மற்றும் நகைகள் அல்லது லக்சல தயாரிப்பு வரம்புடன் போட்டியிடுகின்ற ஏனைய எந்தவொரு பொருளையும் ஊக்குவிக்க அனுமதிக்கப்படமாட்டாது.
- தெரிவுசெய்யப்படும் வியாபார பங்காளர்கள், ஆரம்ப பொருட்கள் மற்றும் சிறந்த காட்சிப்படுத்தலுடன் போதியளவு பொருட்களை பேணும் நடவடி க்கைக்கு பொறுப்புடையவர்களாவர்.
- வழங்கும் தரையின் அளவு 10 × 05 (50 சதுர அடி) ஆக இருக்க வேண்டும்
- தெரிவுசெய்யப்படும் வியாபார பங்காளர்கள், வர்த்தக பெயரை இடுதல், பொருட்களை ஒழுங்குபடுத்தல், வெளிச்ச பலகைகள் மற்றும் இராக்கை களை பொருத்துதல் மற்றும் ஒதுக்கப்படுகின்ற இடத்துக்கான ஏனைய உதிரிப்பாகங்களுக்கும் பொறுப்புடையவர்களாவர்.
- பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் பொருட்கள் 'அனுப்பீடு அடிப்படை'யில் வாங்கப்படும்
- உற்பத்திகளை விற்பனை செய்தல் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்வ தற்கு லக்சல ஊழியர்கள் பொறுப்புடையவர்களாவர்.
- உடன்படிக்கையின் குறைந்த காலம் 1 வருடமும், கூடிய காலம் 2 வருடங்களுமாகும்.
- மாதாந்த நிர்வாக செலவான ரூ. 25,000 பொருந்தும்.

**முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்**

முன்மொழிவுகள் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். முன்மொழிவுகளை அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வியாபார முன்மொழிவுகள்' என்று குறிப்பிடப்பட வேண்டும். இந்த விளம்பரம் பிரசுரமாகி 14 நாட்களுக்குள் கிடைக்கும் வகையில் முன்மொழிவுகள் அனுப்பப்பட வேண்டும்.

**தலைவர்**
**இலங்கை கைவினைப் பொருட்கள் சபை - லக்சல**
**இலக்கம்: 215, பௌத்தாலோக மாவத்தை, தும்முல்ல.**
**கொழும்பு 07.**

மேலதிக விபரங்களுக்கு பணிப்பாளரை - விற்பனை - தொடர்பு கொள்ளுங்கள்
0714521888

ලංකා සතොස
LANKA SATHOSA லங்கா சதொச

**தேசத்திற்கு விலையை நிர்ணயிப்பவர்**

கைத்தொழில் மற்றும் வர்த்தக துறை அமைச்சு

**தேசத்திற்கு விலையை நிர்ணயிப்பவருடன் தொழில் வாய்ப்புக்கள்**

லங்கா சதொச வலையமைப்பானது நாடு முழுவதும் 300ற்கும் மேற்பட்ட கிளைகளுடன் 30 பில்லியன் ரூபா புரள்வை கொண்ட இலங்கையின் பாரிய சில்லறை விற்பனை நிலையமென்ற நாமத்தை கொண்டுள்ளது. நாம் நமது கீழ்காணும் குறிக்கோள்களை அடைய எதிர்பார்த்துள்ளோம்.

- வாழ்க்கை செலவை குறைத்தல்
- நாட்டு மக்களை வியாபாரங்களுடன் சம்பந்தப்படுத்தல்
- சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்கான வியாபார கோரலை நாடு முழுவதும் கொண்டு வர வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தல்.

மேற்குறிப்பிட்ட நம் இலக்குகளை அடைய எமது வியாபார நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்த எமது கிளைகளை 500 ஆக அதிகரித்து புரள்வை ரூபா. 50 பில்லியனாக அதிகரிக்க எதிர்பார்க்கின்றோம். எமது அணியில் இணைத்து கொள்ள விற்பனை உதவியாளர்கள், களஞ்சிய உதவியாளர்கள் வெற்றிடங்களுக்காக தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இதற்கான தகைமைகள் உங்களுக்கு இருக்குமாயின் உங்களின் தபாலுறையின் இடது பக்க மூளையில் பதவியை குறிப்பிட்டு பதிவுத்தபாலில் விண்ணப்பத்தை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

**விற்பனை நிலைய முகாமையாளர்**

லங்கா சதொச வலையமைப்பில் உள்ள விற்பனை நிலையங்களுக்காக செயற்திறன் மிக்க, துடிப்பான விற்பனை நிலைய முகாமையாளர்களை தெரிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சூப்பர் மார்க்கட்கள் அல்லது திணைக்களங்களின் களஞ்சியசாலைகளில் வாடிக்கையாளர்களுக்கான பொருட்கள் சில்லறை விற்பனையில் ஈடுபட்டிருப்பின் மேலதிக தகைமையாக கொள்ளப்படும். வாடிக்கையாளர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறை தன்மை ஏற்படாதவாறு களஞ்சியசாலை செயற்பாடுகளுடன் இணைந்து செயற்படும் தன்மையுடன் அதி உயர் வாடிக்கையாளர் சேவையை பெற்றுக்கொடுத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.

விற்பனை நிலைய முகாமையாளர்களிடம் முக்கியமாக எதிர்பார்க்கப்படுவது விற்பனை செலவுகளை கட்டுப்படுத்தும் முறை மற்றும் அதிக அனுகூலங்களை பெறும் செயற்திறன் மிக்க செயற்பாட்டுடன் தனி முகாமைத்துவத்தின் மூலம் விற்பனையை அதிகரிக்கும் திறன் என்பவற்றை கொண்டிருத்தல் வேண்டும்.

**எதிர்பார்க்கப்படும் தகைமைகள்**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதி அல்லது வியாபார நிர்வாகம் தொடர்பான பட்டம்

அல்லது

02. ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்துறை சம்பந்தமான நிறுவனத்தில் வெற்றிடத்திற்கு பொருத்தமான இடைநிலை பரீட்சையொன்றில் சித்தி அடைந்திருத்தல்.

சம்பள குறியீடு : MA4
சம்பளம் : ரூபா. (17,720 – 10x 325- 15x 400- 5x475- 29,345)
ஏனைய கொடுப்பனவுகள் : (வாழ்க்கைச்செலவு கொடுப்பனவுகள்- ரூபா. 7,800/- + தொலைபேசி கொடுப்பனவுகள் - ரூபா. 1,500/- மேலதிக கொடுப்பனவுகள் - ரூபா. 10,000/- )
வயதெல்லை : 45 வயதிற்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

**நீங்கள் இத்தகைமைகளை கொண்டுள்ளீர்களெனின் உங்களுடைய சுயவிபரக்கோவையுடன், உங்கள் சான்றிதழ் பிரதிகளை இந்த விளம்பரம் பிரசுரமாகி 10 நாட்களுக்குள் எமக்கு கிடைக்கப்பெறுமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வையுங்கள்.**
**(விண்ணப்பிக்கும் பதவியினை உறையின் மேல் இடது கை பக்க மூலையில் குறிப்பிட்டு அனுப்பவும்.)**

தலைவர்
**வரையறுக்கப்பட்ட லங்கா சதொச,**
இல: 108, நெக்ரிஸ் கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு-01




# 'பாரம்பரியம்' ஒரு பாதாம் ஹல்வா!

சிறுகதை, கவிதை, நாவல், நாடகம், உரைச் சித்திரம், ஊடுருவல் என்று இலக்கியத்தின் பல்வேறு பிரிவுகளிலும் கைவைத்து மகத்தான வெற்றி கண்டுள்ள ஓர் எழுத்தாளர் கொழும்பு நகரில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றால் அவர் யாரென்று பலருக்கும் தெரியும். புதிய தலைமுறையினர் சிலருக்குத் தெரியாது. அவர் வேறு யாருமல்லர். வாழைத் தோட்டத்தின் வாரிசு என்றழைக்கப்படும் எஸ்.ஐ.நாகூர் கனிதான் அவர்.

சிறுகதைகளுக்காகப் பல பரிசுகளை வென்றுள்ள மூத்த எழுத்தாளரான காதிபுல் ஹக், கலாபூஷணம் எஸ்.ஐ.நாகூர்கனி கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8.15க்கு இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியில் பேட்டி காணப்பட்டார்.



இலங்கை வானொலி முஸ்லிம் சேவை புதிய நிகழ்ச்சியொன்றை ஆரம்பித்துள்ளது. நிகழ்ச்சியின் மகுடம் 'பாரம்பரியம்' (நல்ல நாமம்)



மூத்த எழுத்தாளர்களைப் பேட்டிகாணும் இந்நிகழ்ச்சியில் முதல் நபராக நாகூர் கனி உள்வாங்கப்பட்டுள்ளார். மகிழ்ச்சி! இந்த நேர்காணல் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குபவர் மற்றொரு மூத்த எழுத்தாளரும் வானொலிக் கலைஞருமான கலாபூஷணம் எம்.எஸ்.எம்.ஜின்னா. இவர் இந்த நேர்காணல் நிகழ்ச்சியை நடத்தப் பொருத்தமானவரே.

அதனை நிரூபிக்கும் வகையில் அமைந்திருந்தது முஸ்லிம் நிகழ்ச்சியின் பாரம்பரிய நிகழ்ச்சி கிட்டத்தட்ட நாற்பது நிமிடங்கள் ஒலிபரப்பான இந் நேர்காணல் நிகழ்ச்சி விறுவிறுப்பாக அரங்கேறியது. எழுத்தாளரின் பழைய அநுபவங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. சிற்சில இடங்களில் தொய்வு தட்டினாலும் சுவைகுன்றாமல் நிகழ்ச்சி முன்நகர்த்தப்பட்டது. நாகூர்கனி தனது பழைய கலை, இலக்கிய அனுபவங்களை நேயர்களுடன் பகிர்ந்து கொண்டார். தினபதி, சிந்தாமணி, வீ.ஏ.கபூர், காப்பியக்கோ ஜின்னாஹ் ஷெரிபுத்தீன், அல் - அசூமத் பற்றியெல்லாம் தொட்டுச் சென்றார். அவர்கள் பற்றிய சுவையான தகவல்களையும் நேயர்களுடன் பகிர்ந்து கொண்டார். போதாக்குறைக்கு நாகூர்கனியின் சிறுகதையொன்றின் சில பகுதிகளைப் படித்து (அல்ல நடித்து) காட்டினார் ஜின்னா. முழுக்கதையையும் படிக்க மாட்டாரா என்ற உணர்வையே அது ஏற்படுத்தியது.

மொத்தத்தில் தேவையான நேரத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள தேவையான நிகழ்ச்சி இந்தப் பாரம்பரியம் எனத் துணியலாம். பணிப்பாளர் ஹாபிஸ் எஸ்.எம். ஹனீபாவுக்கும் ஒரு ஷபாஸ் (ஷா - அப்பாஸ்) ஆனால் முஸ்லிம் சேவையில் பங்குகொள்ளும் கலைஞர்களுக்குச் சன்மானம் அல்லது கொடுப்பனவு வழங்கும் விவகாரத்தில், இன்னும் ஏன் கரிசனை காட்டாமல், கண்ணை மூடிக் கொண்டிருக்கிறார்கள் இந்த அதிகாரிகள் என்பதுதான் புரியாத 'புதி' ராக இருக்கிறது.

## ஆய்வாளர் கவனத்திற்கு....

கடந்த சில வாரங்களாக இலக்கிய ஆய்வுகள் செய்வோருக்கு உதவும் வகையில் இந்நாட்டின் சிறுகதை, கவிதை, நாவல் எழுத்தாளர்களின் பெயர் விபரங்களை வெளியிட்டிருந்தோம். சில பெயர்கள் தவறியுள்ளன. தவறிய பெயர்களை இணைத்துக் கொள்கிறோம்.

அந்த வகையில் நாவல் இலக்கியம் படைத்தளித்த ஜலீல், மாத்தரை ஹஸீனா வஹாப், யாழ் மொஹிடீன் சஜா ஆகியோரின் பெயர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை முத்துறையிலும் (சிறுகதை, கவிதை, நாவல்) வல்லவர்களான முஸ்லிம் எழுத்தாளர்கள் சிலரும் நம் மத்தியில் உள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் திக்குவல்லைக் கமால் எம்.எச்.எம்.ஷம்ஸ், கெக்கிராவை ஸஹானா, ஜரீனா முஸ்தபா, சுலைமா சமீ, நயீமா சித்திக் போன்றோர்.

## நீயே நீ!

(மகளிர் தின சிறப்புக் கவிதை)

ஏனடி பெண்ணே !
என்னடி கண்ணே !
என்ன இல்லை என்றடி
இருக்கின்றாய் ?
பரணி சுமந்தவள் அல்லடி நீ
உன் உள்ளங்கை ஏந்தலிலும்
சுட்டு விழி சுழற்சியிலும்
உன் ஆதிக்கம் அதன் மேலடி.

கோடையில் மழை வந்து
வசந்த காலமும் மாறிப்போகலாம்
காயாத துன்பங்களும் உன்
மனதில் நிரம்பலாம்..
நிறம் மாறாத பூவாகவே
இரு பெண்ணே !

உன்னை விழ்த்தியவர்களின்
நினைப்புக்குள்
புதைக்கப்பட்டவளாய் !
ஆலமரமடி நீ
சாய்ந்து விட்டதாக மார்
மார்தட்டிக் கொண்டு விட்ட
பெருமூச்சில்
புழுதி விலகிய மண்ணுக்குள் நீ
விழுதாய் வேரூன்றி இருந்தது
அவர்கள் அறியாததன்று.
உன் துணிவில் துரத்தியடிக்கப்பட்ட
தோல்விகளில் தலைசாய்த்து
பெற்ற வெற்றியின் பரிவு
வானவில்லையே வளைத்து
ஊஞ்சல் கட்டி ஆடும்
உன் துணிவு !



காற்றுக்குத் தோழியாகி
கலந்திட்ட மேகத்தினுள்
உறங்கிட சென்றவள் நீ !
வண்ணத்துப் பூச்சிகளின்
வர்ணச்சலவையில் துவண்டு
விளையாடி விட்டு வந்தவளும் நீ

மலைகள் மீது முட்டி முட்டி
மோதிக் கொண்டாலும்
கீழே விழ்த்திடாத மேகமானவள்
நீ !
தேவன் எழுதிச் சென்ற
விதியின் வினைகளும்
மாறலாம் பெண்ணே !
உன் நினைவிதி
மாறாதடி முன்னே !

- சமீஹா சபீர்

# இடப்பெயர்வுக் கவிதைகள்

– மேமன்கவி



ஈழத்து தமிழ் பேசும் மக்களின் இடப்பெயர்வு புலம்பெயர்வு வழியாக நிலம் இழந்தவர்களின் குரல் என்பது, ஈழத்து நவீன தமிழ் கலை இலக்கியத்தில் அந்த வகையில் 1825 முதல் கொண்டு 70களின் இறுதி வரையிலான மலையக தமிழ் மக்கள் சமூகத்தினரிடையிலான இடர்பெயர்வுச் சூழலில், அச்சூழலை பின்புலமாகக் கொண்டு படைக்கப்பட்ட கலை இலக்கியங்களில்தான். முதல் முதலாக நிலம் இழந்தவர்களின் குரல் பதிவாகி இருக்கிறது.

அவ்வாறான கலை இலக்கியங்களில் அக்குரல் எவ்வாறு பதிவாகி இருக்கிறது என்பதை மலையக கலை இலக்கிய வரலாறு எழுதியவர்கள் பலர் எடுத்துக் காட்டி வந்துள்ள பொழுதும், அக்கலை இலக்கியங்களில் ஒலித்த குரல், நிலம் இழந்தவர்களின் குரலாக ஒலித்ததை அழுத்தமாக முன்வைக்கவில்லை என்றே எமக்குத் தோன்றுகிறது. அவ்வாறான கலை இலக்கியங்களில் ஒலித்த குரல் நிலம் இழந்தவர்களின் குரல் என்பதை அழுத்தமாக அடையாளப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

அதை தொடர்ந்து 80களுக்கு பின்னான காலகட்டத்திலான தமிழ் பேசும் மக்களின் இடப்பெயர்வுச் சூழலில் படைக்கப்பட்ட கலை இலக்கியங்களிலும் அக்குரல் தொடர்ந்து ஒலித்தது. தொடர்ந்து 90களில் வடபுலத்திலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் மக்களின் கலை இலக்கியங்களிலும் அக்குரலை கேட்கக் கூடியதாக இருக்கிறது.

அவ்வகையான பல்வேறு இடப்பெயர்வுகளை பற்றியும், அதன் கலை இலக்கியங்களைப் பற்றியும் இடப்பெயர்வு கலை இலக்கியம் என்ற பரந்த அளவில் தனியாக பேச வேண்டிய தேவை இருந்தும் விரிவஞ்சி, 80களுக்குப் பின்னான இடப்பெயர்வு புலம்பெயர்வு சம்பந்தமான ஆய்வுகளில், 90களுக்கு பின்னான வடபுலத்து முஸ்லிம்களின் இடப்பெயர்வு சம்பந்தமான கலை இலக்கியங்களை பற்றி விரிவாக பேசப்படாததன் காரணமாக 90களுக்கு பின்னான இலங்கை தமிழ் பேசும் மக்களான முஸ்லிம் மக்களின் இடப்பெயர்வு சம்பந்தமான அதிலும் குறிப்பாக அவர்தம் கவிதையைப் பற்றி மட்டுமே இடப்பெயர்வு கவிதையாக அடையாளப்படுத்தி பேசுவதே இக்கட்டுரையின் நோக்கமாகிறது.

இன்றைய யுகத்தில் மனித இன இருப்பின் மீதான அதிர்வு என்பது வன்முறை வடிவில் அதிகாரத்தின் பல்வேறு வழிகளில் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாக உரிமைப் போராட்டம் என்ற நிலைக்கு ஒவ்வொரு சமூகமும் தள்ளப்படுகின்றது.

அதேவேளை உரிமைப் போராட்டத்தில் பங்கேற்கும் அச்சமூகம் தானே ஓர் அதிகாரமாகத் தன்னைக் கட்டமைத்துக் கொள்ளும் போது தோன்றும் உள்நிலை முரண்பாடும், அந்தப் போராட்டச் சூழல் ஏற்படுத்தும் பாதுகாப்பின்மையும், போராட்டம் நிகழும் மண்ணை விட்டு சொந்த மண்ணிலிருந்து அம்மக்களைப் புலம்பெயரவும் இடம்பெயரவும் வைத்து விடுகின்றன.

அவ்வாறான இடப்பெயர்வுச் சூழலில் இழந்து விட்ட மண்ணுக்கான ஏக்கமும் தவிப்பும் ஏற்படுத்தும் கேவலின் தொடர்ச்சியுடன் போராடுவதும் ஒரு வகையான போராட்டம்தான். அதாவது வேரோடு பிடுங்கப்பட்ட மண் அதற்குரிய இயல்புக்கேற்ப கொண்டிருந்த இடர்வுகளையும் மறந்து பிடுங்கப்பட்ட நிலையின் காரணமாக, விதைக்கப்பட்ட சரணாலயமான மண் தந்த அகதி வாழ்வின் இடர்வுகளையும் மீறியும் வாழ்ந்த மண் பற்றிய ரம்மியங்கள் ஏங்க வைக்கின்றன.

1990ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வடபுலத்தில் ஆயுதப் போராட்டத்திற்கு தலைமை வகித்தவர்களால் பரம்பரை பரம்பரையாக அங்கு வாழ்ந்து கொண்டிருந்த முஸ்லிம் மக்கள் குறுகிய காலக் கெடுவில் வெளியேற்றப்பட்டனர். அதற்கான காரணம் எதுவாயினும். அதற்காக பிற்காலத்தில் மன்னிப்புக் கேட்கப்பட்டாலும், பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மண்ணிலிருந்து பலவந்தமாக விரட்டப்படுதல் என்பது பெரும் அவலம்தான். தமிழ் பேசும் மக்கள் என்ற ஓர் அடையாளத்துடன், வடபுலத்தில் வாழ்ந்த அம்மக்கள், முஸ்லிம் மக்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டு விரட்டப்பட்டது தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைப் போராட்டத்தின் பின்னடைவுக்கான காரணங்களில் ஒன்றாகி விட்டது என்பதுதான் உண்மை.

எல்லா வகையான அவலத்திற்கும் அராஜகத்திற்கும் ஆளாகும் ஒவ்வொரு சமூகக் கூட்டமும், அத்தகைய அவலத்தையிட்ட, அராஜகத்தையிட்ட அனுபவங்களை அவர்தம் கலை இலக்கியங்களில் வெளிப்படுத்துவது தவிர்க்க முடியாத ஒரு வெளிப்பாடு எனலாம்.

(இன்னும் வரும்)

**அடுத்த வாரம் முதல்**
**'ஜலதரங்கம்'**
**பிரதி செவ்வாய்க் கிழமைகளில் வெளிவரும்**

# தலைமைத்துவத்தை சரியாக செய்தால் மறைந்தாலும் போற்றப்படுவார்கள்

**ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் சனூஸ்**





(யூ.எல்.முஸம்மில், இக்பால் அலி)

தலைமைத்தும் வகிப்பவர்கள்,தமது தலைமைத்துவத்தைச் சரியாகச் செய்தல்,அவர்கள் மறைந்தாலும் போற்றப்படுவார்கள் என்று ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளரும் குருநாகல் மாவட்ட முஸ்லிம் சமூக நல கல்வி அபிவிருத்திஒன்றியத்தின் முன்னாள் தலைவருமாகிய எம். யூ.எம்.சனூஸ் கூறினார்.

குருநாகல் மாவட்ட தமிழ்மொழிப் பாடசாலைகளின் மாணவத் தலைவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வொன்று அண்மையில் வாரியபொல விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. குருநாகல் மாவட்ட சமூக நல கல்வி அபிவிருத்தி ஒன்றியத்தின் கல்வி உபகுழு ஏற்பாடு செய்திருந்த இச் செயலமர்வில் விசேட உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறுகுறிப்பிட்டார். ஒன்றியத்தின் தலைவர் எம்.ஏ. ஹாசிம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்ஒழுக்காற்றுக் குழுமாணவ தலைவர்களும் பொறுப்பாசிரியர்களும் அதிபர்களும்,கலந்துகொண்டதோடு அஷ்ஷேய்க் யூ.கே. றமீஸ்,கலாநிதி முர்ஸலின், கலாநிதி ஹஸ்னா ஜாபிர், லெப்பினட் கேர்ணல் பிரசன்ன ஹெட்டிஆராச்சி ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டார்கள்.

ஒன்றியத்தின் செயலாளர் ஏ.எஸ் எம்.மஸாஹிம் பொருளாளர் எம். கரீம், கல்வி உபகுழுத் தலைவர் பீ.எம். பாரூக், அல்ஹாஜ், ஏ.ஆர். எம். நிஸாம், எம்.ஹாரிஸ், எம்.எச். எம். ஹஸன் ஹாஜி,அன்வர் ஹாஜி, ரஹ்மத்துல்லாஹ் ஹாஜி,எம். ஸலாஹுதீன்,பிரமுகர் எம். மாலிக்,ஆகியோர் கலந்துகொண்டார்கள். தொடர்ந்து உரைநிகழ்த்திய சனூஸ் மேலும் கூறியதாவது:-

தலைவர்கள் பலதரப்பட்டவர்கள் இருக்கிறார்கள் மாணவ,தலைவர்கள்,மதத் தலைவர்கள்,சமூகத் தலைவர்கள்,அரசியல் தலைவர்கள்,பாடசாலைஅதிபர்கள்,எனும் இன்னோரன்னபலவகைப்பட்ட தலைவர்களைநாம் காண்கிறோம். சம்பந்தப்பட்டவர்கள் தம் துறைசார்ந்த தலைமைத்துவத்துக்கு கட்டாயம் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். தலைமைத்துவத்தை பெறுப்பேற்பவர்கள் தலைமைத்துவ பண்புடன் நடந்துகொள்ள வேண்டும். அதேபோன்று தம் குழுவினரை அல்லது சமூகத்தினரை சரிவர வழிநடத்தவேண்டும். இன்றேல்அவர்கள் தாம் பொறுப்பேற்ற அமானிதத்தை சரிவர நிறைவேற்றாததன் காரணமாக அல்லாஹவின் தண்டனைக்குள்ளாவார்கள். தலைமைத்துவம் வகிப்பவர்கள் தமதுதலைமைத்துவத்தைசரியாகசெய்தால் அவர்கள் மறைந்தாலும் போற்றப்படுவார்கள். இறைவனிடத்திலும் அவர்களுக்கு வெகுமதி கிடைக்கும்.

பெருமானார் (ஸல்) சிறந்த முன்மாதிரியான தலைமைத்துவம் உலகம் முழுவதும் மறுக்கவோமறைக்கவோ முடியாதுபோற்றப்படுகிறது. அதே போன்று குலபாஉர் ராசிதீன்களின் ஆட்சிக்காலம் சிறந்த தலைமைத்துவத்துக்கு எடுத்துக்காட்டாக திகழ்ந்தது. இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஸ்ரீ ஜவாகர்லால் நேரு தலைமைத்துவம் பற்றிக் கூறுகையில் உலகில் ஓர் உமர் மீண்டும் பிறக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். தலைவர்கள் எனப்படுவோர் அறிவு ஆற்றல் மிக்கவர்களாகவும் அறிவைத் தேடிப் பெறக் கூடியவர்களாகவும் சமகாலஉலகஅரசியல் பற்றிஆராய்ந்துஅறிபவர்களாகவும் தலைமைத்துவத்துக்குஏற்றமனப்பாங்கு உடையவர்களாகவும் இருக்கவேண்டும். ஆகவே மாணவத் தலைவர்களும் சரியான தீர்மானங்களை மேற்கொண்டு குழுவின் மூலம் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

# இளைஞர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



(வாழைச்சேனை நிருபர்)

கனரக வாகன பயிற்சி நெறி முடித்த இளைஞர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் அலுத்வலையில் அமைந்துள்ள கனகர வாகன பயிற்சி பாடசாலை பயிற்சி நிலையத்தில் இடம் பெற்றது.

இலங்கை தொழிற்பயிற்சி அமைச்சின் மூலம் அங்கிகரிக்கப்பட்ட அலுத்வலையில் அமைந்துள்ள கனகர வாகன பயிற்சி பாடசாலை பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் விதானங்க தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சிங்கள தமிழ், முஸ்லிம் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்று கொடுக்கும் நோக்கில் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் பதினைந்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் இப்பயிற்சி நெறி இடம்பெற்றது.பயிற்சி நெறியினை பூர்த்தி செய்த பதினாறு இளைஞர்களுக்கு பிரதி அமைச்சரினால் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.

# மட்டக்களப்பு வேலையற்ற பட்டதாரி நால்வருக்கு அழைப்பாணை

(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் ரீ. கிஷாந்த் உட்பட ஒன்றிணைந்த பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டாளர்கள் 4 பேரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் இன்று ஆஜராகுமாறு நீதிமன்றத்தால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த அழைப்பாணையில் பொலிஸார் மற்றும் மாவட்டச் செயலக அதிகாரிகள் தங்களின் கடமையைச் செய்ய விடாது இடையூறு விளைவித்தார்கள் எனவும் சுமூகமான நிலைமையைக் குழப்பும் வகையில் நடந்துகொண்டார்கள் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டு மட்டக்களப்பு பொலிஸார் வழக்குத் தொடுத்துள்ளனர்.

பெப்ரவரி 28ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் வரை சென்று கவனயீர்ப்புப் பேரணி நடத்தினர்.

இவ்வேளையிலேயே, மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக கடமையில் நின்ற பொலிஸார் மற்றும் கடமையிலிருந்த மாவட்டச் செயலக அதிகாரிகள் அவர்களின் கடமையைச் செய்யவிடாது கவன ஈர்ப்புப் பேரணி நடத்தியர்கள் இடையூறு விளைவித்தார்கள் எனவும் சுமூகமான நிலைமையைக் குழப்பும் வகையில் இவர்கள் நடந்துகொண்டார்கள் எனவும் கூறி மேற்படி 4 பேருக்கும் எதிராக நீதிமன்றத்தில் மட்டக்களப்புப் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

தங்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் வரை போராடுவதாக மட்டக்களப்பு வேலையற்ற பட்டதாரிகள் தொடங்கிய சத்தியாக்கிரகப் போராட்டம் 15ஆவது நாளாகத் தொடர்கிறது.



# பெண் பேசப்படும் நாள்




■ பா.மலரம்பிகை

பெண்கள் நாட்டின் கண்கள், மாதராய் பிறந்திட மாதவம் செய்திட வேண்டும், பெண்கள் அற்ற உலகம் வெறுமையானது இவைகளை அறிஞர்கள் கூறிவிட்டு சென்று விட்டார்கள். இவை வெறும் வாசகம் மட்டுமில்லை, உண்மையும் கூட, ஆம் மனிதனை பொறுத்தவரை அவனது உடலுறுப்புக்களில் கண் எவ்வளவு முக்கியமானதோ, அது போன்றே ஒரு சமூகத்தை எடுத்துகொண்டாலும், ஒரு குடும்பத்தை எடுத்துகொண்டாலும் பெண் என்பவள் முக்கியத்துவம் பெறுகின்றாள்.

தாயாக, மனைவியாக, மகளாக தன் பொறுப்புக்களை சரிவர செய்து வரும் பெண்ணுக்கு இன்றைய தினம் முக்கிய நாள் என்றே கூறவேண்டும். ஆம் இன்றைய நாள் பெண்களை பற்றி பேசக்கூடிய மற்றும் போற்றக்கூடிய நாள் என்றே சொல்ல வேண்டும்.

ஆண்டுதோறும், மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகின்றது. அதே போன்று, இம்முறை இலங்கையிலும் இம் மகளிர் தினத்தில் தேசிய ரீதியான வைபவங்கள் இடம்பெற இருக்கின்றன.

சர்சவதேச மகளிர் திணம் இன்று. இதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

### மகளிர் தினம் எப்படி உருவானது?

ஆணாதிக்க சமுதாயத்தில் இருந்து பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுத்த நாளையே, மகளிர் தினமாக பெண்கள் கொண்டாடுகிறார்கள். பெண்களுக்கான சமத்துவம், உரிமைகளை வலியுறுத்துவதற்காகவும் மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

18 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்களில் ஆண்கள் மட்டுமே பணியாற்றினர். வீட்டு வேலைகளை செய்வதற்காக பெண்களை வீட்டுக்குள்ளேயே முடக்கி வைத்திருந்தனர். பெரும்பாலான பெண்களுக்கு ஆரம்ப கல்வி கூட தரப்படாமல் மறுக்கப்பட்டது.

1857 ஆம் ஆண்டு நிலக்கரிச் சுரங்கங்கள், தொழிற்சாலைகள், நிறுவனங்களில் பணி வாய்ப்பு தரப்பட்டது. பெண்களால் தொழிற்சாலைகளிலும் வேலை செய்ய முடியும் என்பது உலகுக்கு உணர்த்தப்பட்டது. ஆண்களுக்கு நிகராக பணியாற்ற வாய்ப்பு கிடைத்ததே தவிர, ஊதியத்தில் பெண்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது.

இதனால் பெண்கள் மிகுந்த வருத்தமடைந்தனர். ஆண்களுக்கு இணையான ஊதியம், உரிமைகள் வழங்கக்கோரி குரல் எழுப்பினர். அப்போதைய அமெரிக்க அரசு இதற்கு செவிமடுக்கவில்லை. இதனால் அமெரிக்கா முழுவதும் பெண் தொழிலாளர்கள் கிளர்ச்சியில் இறங்கினர், 1857 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி இதற்கான போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தை அரசின் ஆதரவுடன் தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் ஒடுக்கினர். அதன் பிறகு 1907 ஆம் ஆண்டு சம ஊதியம், சம உரிமை கேட்டு பெண்கள் போராடத் தொடங்கினர். 1910 ஆம் ஆண்டு டென்மார்க் நாட்டில், பெண்கள் உரிமை மாநாடு நடந்தது. இதில் உலகின் பல நாடுகளை சேர்ந்த பெண்களின் அமைப்புகள் கலந்து கொண்டு, தங்களது ஒற்றுமையை உலகிற்கு அவர்கள் காட்டினர்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட ஜெர்மன் கம்யூனிஸ்ட் தலைவர் கிளாரே செர்கினே, மார்ச் 8ஆம் திகதியை மகளிர் தினமாக கொண்டாட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்ற வலியுறுத்தினார். பல்வேறு தடங்கல்களால் இந்த தீர்மானம் நிறைவேறவில்லை.

### மார்ச் 8 ஆம் திகதி பிரகடனம்

1920 ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யாவில் செயின்ட் பீட்டர்ஸ் நகரில் நடந்த பெண்களின் போராட்டத்தில் கலந்து கொண்ட ரஷ்யாவின் அலெக்ஸ்சாண்டிரா கெலன்ரா, ஆண்டுதோறும் மார்ச் 8 ஆம் திகதி உலக மகளிர் தினத்தை கொண்டாட வேண்டும் என்று பிரகடனம் செய்தார்.

இதையடுத்து 1921ஆம் ஆண்டு முதல் மார்ச் 8ஆம் திகதி உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. 1975 ஆம் ஆண்டை சர்வதேச மகளிர் ஆண்டாக ஐ.நா பிரகடனப்படுத்தியது. அந்த ஆண்டிலிருந்து சர்வதேசரீதியாக மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

### மகளிர் தினத்துக்கு விடுமுறை

பெண்கள் தமக்கு சுதந்திரம் பெற்ற நாளை கொண்டாடுவதற்காக பல நாடுகளில் விடுமுறையும் கொடுக்கப்படுகின்றது. அந்தவகையில், ரஷ்யா, உக்ரைன், உஸ்பெஸ்கிஸ்தான், வியட்நாம், ஆப்கானிஸ்தான், ஆர்மேனியா, அஜர்பைஜான், பெலாரஸ், புர்கினியா பெசோ, கம்போடியா, கியூபா, எரித்திரியா, கஸகஸ்தான், மால்டோவா, மங்கோலியா, மான்டேநெக்ரோ, தஜிகிஸ்தான், துருக்மெனிஸ்தான் ஆகிய நாடுகளில் சர்வதேச மகளிர் தினத்துக்கு விடுமுறை வழங்கப்படுகிறது. ஆனால், இலங்கையில் விடுமுறை வழங்கப்படாவிட்டாலும், அதற்கான கொண்டாட்டங்களை நிகழ்த்துவதற்கு அரசு தமது பூரண ஆதரவை வழங்குகின்றது.

இலங்கையிலும் தேசிய ரீதியில் வைபவம்

சர்வதேச மகளிர் தின தேசிய வைபவம் இன்றையதினம் மாத்தறை சனத் ஜயசூரிய மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதற்குத் தேவையான நடவடிக்கைகளை மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. இவ்வைபவத்தில் 1500 பெண்கள் உட்பட பல அதிதிகள் பங்கேற்க உள்ளனர்.

'முக்காலத்தையும் அறிந்தவள் - பலத்தினால் வெற்றிகொள்பவள்' எனும் தொனிப்பொருளில் இவ்வருட சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படவுள்ளது. மகளிர் தினத்திற்கு இணைந்ததாக மாத்தறை மாவட்டம் முழுவதும் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

### பெண் சுதந்திரம் என்றால் என்ன?

மகளிர் தினத்தை ஆண்டு தோறும் கொண்டாடினாலும், பெண்களுக்கான பாதுகாப்பு என்ற ரீதியில் அது சரியாக கிடைக்கின்றதா? என்று பார்த்தால் கேள்விக் குறியே, நம் முன்னோர்களின் காலத்தை விடவும் தற்காலத்தில் பெண்கள் உயர் பதவிகளிலும், உயர் அந்தஸ்துக்களிலும் இருக்கின்றார்கள். நம் நாட்டை பொறுத்தவரையில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுகின்றார்கள். அவ்வாறான சூழ்நிலையில் பெண்களுக்கு சரியான பாதுகாப்பு கிடைக்கின்றதா?

பெண் என்பவள் நினைத்தவாறு ஆடை அணிய வேண்டும், ஆண்களுக்கு நிகராக நாங்களும் ஜீன்ஸ் பேண்ட் அணியவேண்டும், அவர்களை போன்றே கூந்தலை கட்டையாக வெட்டவேண்டும். இதுவே எங்களின் சுதந்திரம் என எண்ணும் பெண்ணின் சிந்தனை தவறானது. இது அல்ல பெண்ணின் சுதந்திரம், ஒரு பெண் தன் கல்வியால், தன் தொழிலால், தன் திறமையால் பல உயர் பதவிகளை வகித்து தமக்கென்ற அடையாளத்தை சமூகத்துக்கு எடுத்துகாட்டி அதனை நிலைநிறுத்தி வைக்கிறாளோ அதுவே பெண் சுதந்திரம்.

நம் நாட்டை பொறுத்தவரையில், அதற்கு பஞ்சமில்லை என்றே கூறமுடியும், கல்வியை எடுத்துகொண்டாலும், ஒரு நிறுவனத்தை எடுத்துகொண்டாலும் ஆண்களை போன்றே பெண்களும் சரிசமனாக இருக்கின்றார்கள். தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கைப் பெண்களுக்கு அதிக சுதந்திரம் கிடைக்கப் பெற்றிருக்கின்றமையும் இங்கு எடுத்துக்காட்டத்தக்கது.

### உலகளவில் பெண்களுக்காக பல அமைப்புக்கள்

சர்வதேச ரீதியில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களை வன்முறைகளிலிருந்து தடுக்கவும் பல அமைப்புக்கள் உள்ளன. அந்தவகையில் தெற்காசியாவில் 2004 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட 'எங்களால் முடியும்' பிரச்சார அமைப்பு முக்கியமானதாகும். இது தெற்காசிய நாடுகளான பங்களாதேஷ்;, நேபாளம்;, இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய ஆறு நாடுகளைமையமாகக் கொண்டு இயங்குகிறது.நம் நாட்டில் பெண்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் பலஅமைப்புக்கள் உள்ளன. அதில் தேவை நாடும் மகளிர் அமைப்பு, மகளிர் விவகாரஅமைச்சு, சேவா வனிதா இயக்கம், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி ஆகியவை முன்னணி வகிக்கின்றன.

இவ்வாறு சர்வதேச மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பெண்களுக்கான பல அமைப்புக்கள் பெண்கள் உரிமைக்காக, பெண்கள் பாதுகாப்புக்காக குரல் கொடுத்தாலும், அவை நிரந்தமாக அனைத்து பெண்களுக்கும் கிடைக்கின்றதா?

உதாராணமாக புங்குடுதீவு மாணவி வித்தியா வன்முறைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கு இன்னும் இழுபறி நிலையில் உள்ளது. இந்த சம்பவம் நடந்த சில நாட்களில் அனைத்து மகளிர் அமைப்புக்கள் மட்டுமன்றி சிவில் சமூக அமைப்புக்களும் போராட்டங்கள், ஆரப்பாட்டங்களை முன்னெடுத்தன. ஆனால், தற்போது அதற்கான எவ்வித சத்தங்களும் இல்லாமல் போய்விட்டது.

அதனடிப்படையில், இந்த பொது போக்குவரத்திலும் பெண்களுக்கு தேவையான பாதுகாப்பு அல்லது இடையூறு அற்ற பயணம் கிடைக்கின்றதா? அல்லது பெண்களின் பயணம் பாதுகாப்பானதாக இருக்கின்றதா? என்று பார்க்கும் போது பெரும்பாலும் இல்லையென்றே கூறமுடியும்.

அந்தவகையில், 2015 ஆம் ஆண்டு இலங்கை ஐக்கியநாடுகள் சனத்தொகை நிதியத்தினால் நடாத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் முடிவுகளின் படி இலங்கையில் 90 சதவீதமான பெண்கள் பொதுப் போக்குவரத்து பேருந்துகளிலும் புகையிரதங்களிலும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். இதில், 4 சதவீதமானோரே பொலிஸாரின் உதவியை நாடிச் செல்கின்றனர்.

பொதுப்போக்குவரத்தின் போது பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுதலானது உலகளாவிய ரீதியில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையாக இருக்கின்றது. பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் அடிப்படை உரிமையையும் சுதந்திரத்தையும் மீறுவதற்கு மேலதிகமாக இது பெண்கள் பொதுவாழ்வில், வேலைத்தளத்தில் மற்றும் கல்வியில் முழுமையான பங்களிப்பை வழங்க முடியாத பாதுகாப்பற்ற சூழலை ஏற்படுத்தவும் பங்களிக்கிறது. 50 சதவீதமான பெண்கள் வேலைக்கு செல்வதற்காகவும், 28 சதவீதமான பெண்கள் கல்விகற்க செல்வதற்காகவும், 20 சதவீதமான பெண்கள் பிற தனிப்பட்ட காரணங்களுக்காக பொது போக்குவரத்தினை பயன்படுத்துகின்றனர்.



### எல்லாத்துறைகளிலும் பெண்கள் முன்னேற்றம்

இன்றைக்கு பெண்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேறி பெண் இனத்துக்கே பெருமை சேர்க்கிறார்கள். ஆனால் எவ்வளவுதான் முன்னேறினாலும் இன்றும் பெண்களுக்கு நடக்கும் கொடுமைகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இன்னமும் பெண் குழந்தைகளைக் கொல்லும் அவலம் இருந்து கொண்டு தான் இருக்கிறது. எனவே, தோல்விகளை கண்டு துவண்டு விடாது அதனை எதிர்கொண்டு வாழ்வில் வெற்றிக்கண்ட பல பெண்கள் நம் மத்தியில் வாழ்கின்றனர்.

அவ்வாறான பெண்களுக்கு மட்டுமன்றி அனைத்து பெண்களுக்கும் இன்றைய நாளில் மகளிர் தின நல்வாழ்த்துக்கள்.

# அரசியலமைப்பு அரசாங்கத்தின் நிறுவனம் சார்ந்த நிலைமை

**(நேற்றைய தொடர்ச்சி....)**

இறுதியாகக் கூறப்பட்ட நாடுகளில் சட்ட ஆட்சியின் மிகமுக்கிய பாதுகாப்புகளில் ஒன்று மக்களிடம் இல்லை - குறிப்பாக, அரசியலமைப்பின் வெளிப்படுத்திய நியமத்துடன் நீதியின் முன்னுள்ள சட்டம் அரசியலமைப்பிற்கு முரணாக இல்லை என்பதைச் சவாலுக்குட்படுத்தும் துயருறும் ஒவ்வொரு பிரசையினதும் ஆற்றல் நிருவாகச் செயலுக்கு எதிரான நடைமுறைகள் செயன்முறை மற்றும் இயற்கை நீதியின் நியமங்கள் ஆகிய இரண்டையும் வலுவூட்டுவதற்கு இந்த நாடுகளில் உள்ள நீதிமன்றங்களின் ஜாம்பவானுக்குரிய முயற்சிகளினால் அரசியலமைப்பின் குறைபாடு பகுதியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், சர்ச்சைக்குரிய (தவறான) சட்டம் பிரபல குழுக்களின் உரிமைகளைப் பாதிப்பதில்லை. அத்துடன் மக்கள் அபிப்பிராயத்தின் சக்தியுடன் அதனை நீக்குவதற்கு வழிவகுக்கும் பொதுமக்களினது எதிர்ப்பு மற்றும் ஊடக அவதானங்களை முடக்கிவிடுவதற்குத் தேவையான உந்துவிசை சாத்தியப்படாமல் உள்ளது. ஐக்கிய அமெரிக்க இராச்சியம், கனடா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் அரசியலமைப்பு அரசாங்கம் இல்லை என நான் ஆலோசனை வழங்கவில்லை. மாறாக, அரசியலமைப்பு அடைவுமட்டத்தில், அந்நாடுகள் சிறந்த அரசியலமைப்பு வாதத்திற்கு ஒப்பீடாக அண்மையில் உள்ளனர் என்பதாகும். அளவுகடந்த முரண்பாட்டுவாதத்திற்கு எதிராக நாங்கள் பாதுகாக்க வேண்டியுள்ளது. இந்த நாடுகளின் அரசியலமைப்புகள் பற்றிய அடிப்படைக் கட்டமைப்புகள் பாரிய மாற்றங்களுக்கு மிகப்பலம் வாய்ந்ததாக உள்ளதை நிரூபித்துள்ளன வாயினும், திருத்தங்கள் மேற்கொள்ளப்படவும் அவை உதவியுள்ளன. ஐந்தாவது மற்றும் பதினோராவது ஐக்கிய அமெரிக்க இராச்சிய மேன்முறையீட்டு வட்டார நீதிமன்றங்கள், அத்தகைய திருத்தங்களுக்கான சிறந்த உதாரணத்தை வழங்குவதற்கு, உறுதியான நடவடிக்கையின் சட்டமுறைப்படியான நோக்கமாக மாணவ குடித்தொகையில் உள்ள கலாசார வேற்றுமையைக் கருத்திற்கொண்டு தள்ளுபடி செய்தது. இத்தகைய அரசியலமைப்புகளின் உறுதித்தன்மையானது தமது நிறுவனம் சார் கொள்கைகளைப் பலப்படுத்துவதுடன் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

### அரசியலமைப்பு அரசாங்கத்தின் நிறுவனம் சார்ந்த நிலைமை

இறுதியாக, அரசியலமைப்பு மக்களின் அனுபவத்திலே நிலைத்துள்ளது. சிறந்த உத்தேசிக்கப்பட்ட அரசியலமைப்பு உபகரணம் அரசியலமைப்பு அரசாங்கத்தை வழங்க முடியாத நிலைமை எப்போதெனில் உத்தியோகபூர்வ செயற்பாடுகளின் ஒழுங்குகள் அதன் நியமங்களுடன் தொடர்புறாத போது அல்லது அதிகாரிகள் அதிகாரத்தின் எதிர் கூறுகையில் ஒழுங்கற்ற ஈடுபாட்டைக் காண்பித்தல் ஆகிய நிலைமைகளினாலாகும். சட்டவாக்க மற்றும் நீதிக்குரிய கட்டமைப்புகளுடன் கூடிய அரசியலமைப்பு உரைப் பகுதி உத்தியோகபூர்வ செயலுக்கு வழிகாட்டலை வழங்குகிறது. மேலும், இது உயிர்ப்பான அரசியலமைப்பைத் தீர்மானிக்கும் முக்கிய பகுதியாகும். எனினும், எந்த அளவிற்கு அதிகாரிகள் அரசியலமைப்பு நியமங்களினால் உண்மையில் வழிகாட்டப்படுகின்றனர் என்பது அரசியலமைப்பு உரைப்பகுதி வழங்கும் உளவியல் ரீதியான விளைவுகளைப் பார்க்கிலும் பல நிர்ப்பந்தங்கள் மற்றும் நிபந்தனைகளில் தங்கியுள்ளது. எனவே சட்டத்தரணி ஒருவரின் அரசியலமைப்புச் சட்டத்துடனான தனித்துவமுன்னெடுப்பானது மிகவும் தீவிரமான விளைவுகளை தவறான எண்ணக்கருவாக்கம் மூலம் அரசியலமைப்பு அரசாங்கத்திற்கு ஏற்படுத்தும். நிறுவனம் எனும் எண்ணக்கரு விளையாட்டில் ஈடுபட்டுள்ள ஆட்டக்காரர்களுக்கு எதிராக விளையாட்டின் விதிகளை உருவாக்கும் நிர்ப்பந்தங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. (North 1990, 3) நிறுவனங்கள் ஆட்டக்காரர்களுக்குச் சொந்தமான தாபனங்களிலிருந்து வேறுபடுகிறது. நிறுவனம் எனும் நெகிழ்ச்சியுடைய சொல் சகல விதமான நிர்ப்பந்தங்களை உள்ளடக்கி மனித நடத்தை, சட்டம் மற்றும் ஒழுக்கவிதிகள், விதித்தொகுதிகள், கலாசார நிர்ப்பந்தங்கள் (கௌரவம் தொடர்பானவை போன்ற) அபரிமித நம்பிக்கை மற்றும் ஏனைய மிகவும் தனிப்பட்ட மற்றும் செயல்களுக்கு வழிகாட்டும் குறைவாக புரிந்து கொள்ளபபட்ட விழுமியங்கள் (பெற்றோர் மற்றும் சந்ததி ஆகியவற்றின் பாசம் மற்றும் உடனிருப்போர் மீதான கனிவு ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்துகிறது.)

இங்கு வரைவிலக்கணம் செய்யப்பட்ட நிறுவனங்கள் மீது செலுத்தப்பட்டவைகளை விட அரசியல் செயற்பாட்டாளர்கள் மீதான நிர்ப்பந்தங்கள் அதிகமாக இருப்பதே உண்மையாகும். பலவகையான தேர்வு முறையற்ற பௌதீக நிர்ப்பந்தங்கள் உள்ளன. ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தைப் போன்ற பாரிய மாநிலங்களைவிட சிங்கப்பூர் போன்ற நகர மாநிலங்களில் பலமான மத்திய அரசாங்கம் மிகவும் சாத்தியமாகவுள்ளது. ஆப்கானிஸ்தான் அதன் நில அமைப்பு மற்றும் பரவலான பிராந்திய இனத்துவக் குழுக்கள் ஆகியவை காரணமாக ஒரே இடத்திலிருந்து ஆளுகை செய்யப்பட முடியாது என சிலர் கருதினர். Montesquieu என்பவர் ஆங்கிலேயரின் 'தந்திரத்திற்கு காலநிலை செல்வாக்குச் செலுத்தியது என நினைத்தார். ரஷ்ய சம்மேளனம், நைஜீரியா ஆகியவற்றில் உள்ளது போன்று சமஷ்டி அமைப்புகளுக்கு இனத்துவ மற்றும் சுதந்திர பத்திரிகைப்பேரவை, தொழிற்சங்கங்கள், வியாபாரச் சங்கங்கள் மற்றும் ஏனைய பல்வேறு கரிசனைக் குழுக்கள் ஆகியன உட்பட சில தாபனங்கள் மற்றும் தாபனக் கூட்டமைப்பு வகைகள் அரசியலமைப்பு அரசாங்கங்களை தீர்மானிக்கும் சக்தியை வழங்குகின்றன. அவைகளின் தாக்கம் அரசியலமைப்பு அரசாங்கம் தொடர்பில் சாதகமாக அல்லது பாதகமாக அமையலாமெனினும் அதன் சமநிலையில் அரசியலமைப்பு அரசாங்கம் நிலைத்து நிற்பதற்கும் கடமைப்பட்டுள்ளது. அவை அபிப்பிராயங்களைத் திரட்டி செயல்களுக்கு பலவழிவகைகளை ஏற்படுத்துகின்றன. சாதகமான நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு இறுதியில் இந்த தாபனங்கள் நிறுவன மாற்றத்திற்கு உதவுகிறது. நியமம் தனித்து இயங்கமுடியாது. அது நியமங்களின் வரிவான நிலைமைகளின் ஒரு பகுதியாக மட்டுமே உள்ளது.

**(தொடரும்)**

# அருந்தலாவை பிக்குகள் கொலை; கருணா அம்மானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதது ஏன்?

## கேள்வி எழுப்புகிறது ஜே.வி.பி

(எம்.ஏ.முஹம்மட் உவைஸ்)

அருந்தலாவை பிக்குகள் கொலையுடன் புலிகளின் முன்னாள் தளபதி கருணா அம்மானுக்கு தொடர்பு இருக்கின்றது என்று கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்துள்ள போதிலும்,கருணாவுக்கு எதிராக ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஜே.வி.பி.அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளது. இனியும் தாமதிக்காது இனியாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் சுனில் வடகல கூறுகையில், 30 வருட யுத்தத்தால் இந்த நாடு எவ்வளவு தூரம் பின்னடைவைச் சந்தித்தது என்பதை நாம் அறிவோம். பொருளாதார ரீதியாக இந்த நாடு பாரிய இழப்புக்களை சந்தித்த அதேவேளை உயிரிழப்புக்களையும் சந்தித்தது. அந்த யுத்தம் தமிழர்களை மாத்திரமன்றி முழு நாட்டு மக்களையும் பாதித்தது. தமிழர்கள்போல் சிங்கள,முஸ்லிம் மக்களும் உயிர்களை இழந்தனர்.அந்த வகையில்,புலிகள் சிங்கள மக்களை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தினர்.அவ்வாறான தாக்குதல்களில் ஒன்றுதான் அரந்தலாவை பிக்குகளின் கொலை.

இந்தக் கொலையுடன் புலிகளின் முன்னாள் தளபதியான கருணா அம்மானுக்குத் தொடர்பு இருப்பதாக கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அந்த ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டது மஹிந்தவின் ஆட்சியில் கருணா அந்த அரசில் அமைச்சராக இருந்த காரணத்தால் மஹிந்த இந்த விவகாரத்தைக் கணக்கில் எடுக்கவில்லை. இந்த நிலையில்,மஹிந்தவின் ஆட்சி கவிழ்ந்து இரண்டு வருடங்கள் ஆகின்றன.

புதிய அரசுகூட,இது தொடர்பில் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இதை நாம் இந்த அரசுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

இது தொடர்பில் அரசு உடன் விசாரணையைத் தொடங்க வேண்டும். தகவல் அறியும் சட்டத்தைப் பயன்படுத்தி இது தொடர்பிலான உண்மை நிலையை அறியும் உரிமை இந்த நாட்டு மக்களுக்கு உண்டு. ஆகவே,மக்கள் இதை அறிவதற்கு

## அமைதியாக மனிதனை கொல்லும் சர்க்கரை நோய்

### வைத்திய கலாநிதி நக்பர்

(அட்டாளைச்சேனை பைஷல் இஸ்மாயில்)

இலங்கையின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு நோயாகவும் அமைதியாக மனிதனைக் கொல்லும் பயங்கர நோயாகவும் சர்க்கரை வியாதி காணப்படுகின்றது என்று நிந்தவூர்



ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்திய சாலையின் பணிப் பாளரும் அட்டாளைச் சேனை தள ஆயுர்வேத வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்திய கலாநிதி கே.எல்.எம்.நக்பர் தெரிவித்தார்.

சுகாதார சுதேச போசனை பிரதி அமைச்சர் பைஷல் காசிமின் வேண்டுகோளுக்கமைவாக நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவின் நடமாடும் வைத்திய சேவை நேற்று நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் பணிப்பாளரும் அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்திய கலாநிதி கே.எல்.எம்.நக்பர் தலைமையில் இடம்பெற்றபோது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதனை கட்டுப்படுத்துவதற்கு ஒவ்வொரு தனிநபரும் தனது வாழ்க்கை முறையில் ஒரு மாற்றத்தை கொண்டுவர முயற்சிக்கவேண்டும்.

அதற்கு ஆதரவாகவும் பாரிய பங்களிப்பையும் ஏற்படுத்தும் நோக்கிலேயே சுதேச மருத்துவம் பாரிய சேவையை நோயாளர்களுக்கு செய்து வருகின்றது.

அதன் முதற்கட்டமாக ஆயுர்வேத ஆராய்ச்சி தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவின் நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்துள்ளோம் என்றார்.

நடமாடும் சேவையில் சுமார் 250 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு தங்களின் ஆரம்ப கட்ட பரிசோதனைகளை மேற்கொண்டனர். இதில் சர்க்கரை அளவின் பரிசோதனை மேற்கொண்டதில் 175 பேருக்கு சர்க்கரை வியாதி இருப்பதாக அடையாளம் காணப்பட்டதாகவும் வைத்திய கலாநிதி கே.எல்.எம்.நக்பர் தெரிவித்தார்.

## ஹரீஸின் இணைப்பு செயலாளர் பதவியிலிருந்து அன்ஸில் இராஜினாமா

(அஸ்லம் எஸ்.மௌலானா)

விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸின் இணைப்புச் செயலாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன்ஸில் அப்பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார்.தனிப்பட்ட சில காரணங்களுக்காக குறித்த முடிவினை தான் எடுத்துள்ளதாக பிரதியமைச்சருக்கு எழுதியுள்ள ராஜினாமா கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.



அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரான இவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசன் அலியுடன் இணைந்து, கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு எதிராக பொதுக் கூட்டங்களை நடத்தி வருகின்ற நிலையிலேயே அவர் பிரதி அமைச்சரின் இணைப்புச் செயலாளர் பதவியை இராஜினாமா செய்துள்ளார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர்பீட உறுப்பினரான எம்.ஏ.அன்ஸில், அக்கட்சியின் சமய, கலாசார விவகார பொறுப்பாளராகவும் பதவி வகித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மெடிகெயார் 2017 தேசிய சுகாதார நலக் கண்காட்சி



(எம்.எஸ்.எம் முன்தஸிர்)

மெடிகெயார்-2017 தேசிய சுகாதார நல கண்காட்சியின் எட்டாவது தொடர் கண்காட்சி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளவில் அமைந்துள்ள சிறிமாவோ பண்டாரநாயக்க கண்காட்சி மண்டபத்தில் கடந்த 3-5 ஆம் திகதி வரை இடம்பெற்றது. சுகாதார போசனை பிரதியமைச்சர் பைசால் காஸிம் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

கண்காட்சி ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் டாக்டர் சுமல் ஹர்சா கொழும்பிலுள்ள பிரபல தனியார் வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள் உள்ளிட்ட வைத்திய பிரமுகர்கள் பலரும் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இம்முறை இடம்பெற்ற கண்காட்சியில் முதற்தடவையாக ஈரான் நாட்டின் மருத்துவத்துறை நிறுவனங்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். பெருமளவிலான மக்கள் கண்காட்சியைப் பார்வையிட்டதுடன் பல்வேறு பரிசோதனைகளையும் இலவசமாகச் செய்து கொண்டனர்.

இந்தியாவின் குழந்தைப்பேறு தொடர்பான பல்வேறு வைத்திய ஆலோசனைச் சேவைப்பிரிவுகளும் கண்காட்சியில் பங்குபற்றி மக்களுக்கான சேவைகளை வழங்கியதுடன் அதிகமானவர்கள் இப்பிரிவில் ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டனர். அமைச்சர் பைசல் காசிம் மற்றும் மாக்டர் சுமல் ஹர்சா உள்ளிட்ட குழுவினர் கண்காட்சியில் கலந்து கொண்ட இந்தியா ஈரான் உள்ளிட்ட அனைத்து காட்சியறைப்பிரிவுகளுக்கும் சென்று பிரதிநிதிகளுடன் உரையாடினார்.

## ஓட்டமாவடி- மஜ்மா நகர் ரஹ்மா மஸ்ஜிதில் ஜும்ஆ ஆரம்பம்

(ஓட்டமாவடி எச்.எம்.எம்.பர்ஸான்)

ஓட்டமாவடி கோறளைப் பற்று மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மஜ்மா கிழக்கு காகித நகர் கிராமத்தில் உள்ள ரஹ்மா பள்ளிவாயசலில் கடந்த 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் இனி வரும் காலங்களில் ஜும்ஆ தொழுகை தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது.

அக் கிராமத்தில் உள்ள மக்கள் ஜும்ஆ தொழுகைக்காக மிக நீண்ட தூரம் செல்வதாலும், குறித்த நேரத்திற்குல் ஜும்ஆ கடமைகளை செய்ய முடியாத காரணத்தினாலும் கிராம மக்கள் நிர்வாகத்திடம் கேட்டதற்கமைய குறித்த பள்ளிவாசலில் ஜும்ஆத் தொழுகையினை ஆரம்பித்ததாக பள்ளிவாசலின் தலைவர் அஷ்ஷெய்க் எஸ்.எச்.அஸ்ரப் (சிறாஜி) தெரிவித்தார்.

இப் பள்ளிவாயலின் முதலாவது ஜும்ஆ உரையினை கடந்த வெள்ளிக்கிழமை பள்ளிவாசலின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ. ஹாமீத் (சிறாஜி) நிகழ்த்தினார். எதிர்வரும் வெள்ளிக்கிழமை (10)ஜும்ஆ பிரசங்கத்தை இஸ்லாமிய அழைப்பாளர் அஷ்ஷெய்க் வீ.ரீ.எம். முஸ்தபா (தப்லீகி) நிகழ்த்தவுள்ளார்.

## டிக்கோயா வைத்தியசாலை கட்டடத்தை இந்தியத்தூதுவர் பார்வையிட்டார்




(ஹட்டன் க.கிஷாந்தன்)

இந்தியா அரசாங்கத்தின் நிதி உதவியில் நவீன வசதிகளுடன் டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தை பார்வையிடுவதற்கு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் த ரஞ்சித் சிங் டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்தார்.

இந்த புதிய கட்டடத்தை மே மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியினால் திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும், அத்தோடு இந்த வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு இலங்கை சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடவிருப்பதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

150 கட்டில்கள் உட்பட 6 சத்திர சிகிச்சை நிலையங்கள், 3 அவசர சிகிச்சை பிரிவு, மின்தூக்கி வசதிகள் உட்பட பல வசதிகள் இக்கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விஜயத்தில் இலங்கைக்கான இந்திய பிரதி தூதுவர் ராதா வெங்கட்ராமன், டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய பணிப்பாளர் திலின விஜயதுங்க மற்றும் வைத்திய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## அரசியல் யாப்பு மறுசீரமைப்பு ஜே.வி.பி, மக்கள் காங்கிரஸுடன் பேச்சு



(கல்குடா நிருபர்)

அரசியல் யாப்பு மறுசீரமைப்பு தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணிக் கட்சிக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மக்கள் விடுதலை முன்னணி கட்சியின் காரியாலயத்தில் இடம்பெற்றது. மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவரும் அமைச்சருமான றிஷாட் பதியுதீன், தவிசாளரும் பிரதி அமைச்சருமான எம்.எஸ். எஸ்.அமீர் அலி, பாராளுமன்ற உறுப்பினர் நவவி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகம் சுபைதீன், சட்டத்தரணி என்.எம். சஹீட், முன்னாள் பிரதி அமைச்சர் ஹுஸைன் பைலா, மேல் மாகாண சபை உறுப்பினர் பாயிஸ், கலாநிதி மரைக்கார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது அரசியல் யாப்பு மறுசீரமைப்பினால் சிறுபான்மை மக்களுக்கு ஏற்படும் சாதகம் மற்றும் பாதகங்கள் பற்றி ஆராயப்பட்டதாக பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

## அக்கரைப்பற்று புதுப்பள்ளியில் பயான் நிகழ்வும் குர்ஆன் நிகழ்வும்

(திகாமடுல்ல நிருபர்)

அக்கரைப்பற்று புதுப்பள்ளிவாசலினால் 17ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டு 30 நாட்களாக நடைபெற்றுவந்த திர்மிதி பயான் நிகழ்வின் இறுதி தமாம் வைபவமும் கத்தமுல் குர்ஆன் நிகழ்வும் அண்மையில் தலைவர் எச்.சீ.எம்.லாபிர் தலைமையில் நடைபெற்றது.

இதன் ஓர் அங்கமாக அக்கரைப்பற்று புதுப்பள்ளிவாசலில் நீண்ட காலமாக நம்பிக்கையாளர்களாக, இமாம்களாக, முஅத்தின்களாக, கட்டடக்குழு உறுப்பினர்களாக பணியாற்றி மரணித்தவர்களை நினைவு கூர்ந்து கத்தமுல் குர்ஆன் ஓதி அவர்களின் பெயரில் மன்சிலும் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந் நிகழ்வில் மௌலவிமார்கள், பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



யாழ் பல்கலைக் கழகத்தின் முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாட்டில் வெளியிடப்படும் ''இன்கிளாப்'' எனும் சஞ்சிகை வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கேட்போர் கூடத்தில் மஜ்ஜிலிசின் தலைவர் வை.எம்.றஸீம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக யாழ் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி செல்வி வசந்தி அரசரட்ணமும், கௌரவ அதிதிகளாக கலாநிதி றமீஸ் அப்துல்லா தென்கிழக்குப் பல்கலைக் கழகம், கலாநிதி ரி. முகுந்தன் யாழ் பல்கலைக்கழகம், கலாநிதி கே. சுதாகர், கலாநிதி எஸ்.சிறிசற்குணராஜா உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டதுடன் சஞ்சிகையின் பிரதிகளையும் மாணவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர். (ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடல்: அடுத்த வாரம் முதல் நாடுபூராகவும்

## மஹிந்த அணியால் ஆர்ப்பாட்டம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு வருவதற்கு எதிராக நாடளாவிய ரீதியில் அடுத்த வாரங்களில் பல்வேறு ஆர்ப்பாட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

மேலும், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்களை இலங்கை அரசாங்கத்தின் மீது பிரயோகிக்குமாறு ஒன்றிணைந்த எதிர்க்கட்சி ஐரோப்பிய ஒன்றியத்திடம் உதவி கோருகின்றது.

தேர்தலை நடத்தினால் படுதோல்வி அடைவது உறுதி என்ற காரணத்தினாலேயே உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்த நல்லாட்சி அரசாங்கம் இழுத்தடிப்பு செய்து வருவதாக அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவருமான ஜி.எல். பீரிஸ் குற்றம் சாட்டினார்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது. இதில் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தனவும் கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது உரையாற்றிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸ் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையில் உள்ள விவகாரங்களில் வீணாக தலையிடுவதை விடவும் இலங்கை மக்களின் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டு வருவதை அரசாங்கத்திடம் சுட்டிகாட்டும் முக்கிய பொறுப்பு அவர்களுக்கு உள்ளது என்பதை நாங்கள் அறிவதோடு அவர்கள் அதனை செய்வார்கள் என்றும் நம்புகின்றோம். தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு வருவதறகு எதிராக நாடளாவிய ரீதியில் அடுத்த வாரங்களில் பல்வேறு ஆர்ப்பாட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளோம். மக்களின் வாக்குரிமை கடந்த இரண்டு வருடங்களாக பறித்தெடுத்த அரசாங்கத்தைப்போல எந்த அரசாங்கமும் இருந்ததில்லை.

இன்று பிரதேச மற்றும் நகர சபைகளின் பணிகளை அதிகாரிகளே நிறைவேற்றிவருகின்றனர். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

மக்களது வாக்குகளால் தெரிவான பிரதிநிதிகளே அதனை செய்ய வேண்டும். எனவே அந்த வாக்குரிமையை பெற்றுக் கொடுக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் பிரயோகிப்பதற்கான உரிமை அவர்களுக்கு உள்ளது. ஏனென்றால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைக்காக இலங்கை அரசாங்கம் 27 விதமான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டதன் ஊடாக அந்த உரிமை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

# களுத்துறை தாக்குதல்: இன்று சம்பவ இடத்திற்கு செல்லும் குழு

களுத்துறை சிறைச்சாலை பஸ் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட குழு இன்று, சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு செல்லவுள்ளது. கடந்த 27ஆம் திகதி காலை களுத்துறை சிறைச்சாலை பஸ் மீது இனந்தெரியாத சிலர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதில் ஏழ்வர் உயிரிழந்ததோடு,

இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள சிறைச்சாலைகள் அமைச்சினால் மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது. மேலும், குறித்த குழுவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூடி, ஆரம்பகட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.


## நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

## விலைமனு அறிவித்தல்

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வழங்கல்கள் / வேலைகளுக்காக தகைமை மற்றும் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சார்பில் பெறுகைக் குழுவின் தவிசாளர் இத்தால் அழைக்கின்றார்.

| ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவைப்படும் கேள்விப் பிணைமுறி | தகைமை தேவைப்பாடுகள் | மதிப்பீட்டு செலவு(ரூபா) வெட் வரி நீங்கலாக | ஆவணங்கள் வழங்குமிடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர் | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| **சிவில் கேள்விகள்** | | | | | | |
| திருகோணமலை நீர் வழங்கல் திட்டத்தின் கந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் சகதி உலர்த்தும் படுக்கையை அமைத்தல்<br>**ஒப்பந்த இல: RSC(E)/DGM/12BTF/WORK/KANTALE/2016/70** | 10,000/- + பெ.சே. வரி | ரூபா. 632,500/- | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு துறையில் c5 மற்றும் அதற்கு மேற் பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987 இன் 3 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவு சான்றிதழ் | 42.16 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை தொலைபேசி/ தொலைநகல்: 011-2635885 | 29/03/2017 10.00 மணி |
| மொனராகலை – புத்தல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் சேவை இணைப்பு மாற்றுவதற்கு uPVC குழாய்கள், பொருத்திகளை பதித்தல்<br>**ஒப்பந்த இல: MBIWSP/L/MONARAGALA-BUTTALA/2017/04** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 49,000/- | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு துறையில் c8 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு | 3.25 மில்லியன் | செயற்றிட்ட பணிப்பாளர் (MBIWSP), இல. 464A, இரண்டாம் மாடி, செஞ்சிலுவை கட்டிடம், வெல்லவாய வீதி, மொனராகலை. தொலைபேசி: 055-2277163, தொலைநகல்: 055-2277135 | 29/03/2017 14.00 மணி |
| மொனராகலை – புத்தல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் கீழ், குழாய்கள் பதிக்கப்பட்டிருக்கும் வீதி நெடுகிலும் எஞ்சியுள்ள நிரந்தர மறுநியமன வேலைகள்<br>**ஒப்பந்த இல: MBIWSP/C/MONARAGALA-BUTTALA/2017/05** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 56,000/- | அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணம்/ கட்டிட கட்டுமான துறையில் c8 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு | 3.75 மில்லியன் | செயற்றிட்ட பணிப்பாளர் (MBIWSP), இல. 464A, இரண்டாம் மாடி, செஞ்சிலுவை கட்டிடம், வெல்லவாய வீதி, மொனராகலை. தொலைபேசி: 055-2277163, தொலைநகல்: 055-2277135 | 29/03/2017 14.00 மணி |
| மொனராகலை நீர் வழங்கல் திட்டத்தின் சுத்திகரிப்பு நிலையத்தை சீரமைத்தல்<br>**ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(U)/REH/MONARAGALA/2017/18** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 54,000/- | கட்டிட கட்டுமான துறையில் c8 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு | 3.6 மில்லியன் | கேள்விகள் பிரிவு, பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (ஊவா), தே.நீ.வ.வ.ச., மெதிரிய வீதி, பதுளை. தொலைபேசி: 055-2230934, தொலைநகல்: 055-2230974 | 15/03/2017 14.00 மணி |
| பொரலந்த நீர் வழங்கல் திட்டத்தின் ஈரப்பு பகுதிக்கு DI குழாய்கள், பொருத்திகள் மற்றும் உதிரிப்பாகங்களை பதித்தலும், இணைத்தலும்<br>**ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(U)/REH/BORALANDA /2016/135** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 40,900/- | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு துறையில் c8 மற்றும் அதற்கு மேற் பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு | 2.7 மில்லியன் | கேள்விகள் பிரிவு, பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (ஊவா), தே.நீ.வ.வ.ச., மெதிரிய வீதி, பதுளை. தொலைபேசி: 055-2230934, தொலைநகல்: 055-2230974 | 15/03/2017 14.00 மணி |
| **இயந்திரம் மற்றும் மின்னியல் கேள்விகள்** | | | | | | |
| குருநாகல் பாதுகாப்பு சேவைகள் கல்லூரி நீர் வழங்கல் திட்டத்துக்கு குழாய் பம்பி தொகுதி மற்றும் உதிரிப்பாகங்களை வழங்கி, பொருத்தல்<br>**ஒப்பந்த இல: E&M(NW)/P/RC/ DEFENCE/2017/15** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 18,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடமேல்), தே.நீ.வ.வ.ச., தம்புள்ளை வீதி, குருநாகல் தொ.பே: 037-2221161 தொ.நகல்: 037-2230086 | 22/03/2017 14.00 மணி |
| அலவ்வ நீர் வழங்கல் திட்டத்துக்கு நீரில் மூழ்கி நீரகற்றும் பம்பி மற்றும் உதிரிப் பாகங்களை வழங்கி, பொருத்தல்<br>**ஒப்பந்த இல: O&M(NW)/P/RH/ ALAWWA/2017/11** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 25,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடமேல்), தே.நீ.வ.வ.ச., தம்புள்ளை வீதி, குருநாகல் தொ.பே: 037-2221161 தொ.நகல்: 037-2230086 | 29/03/2017 14.00 மணி |
| பண்டாரவளை நீர் வழங்கல் திட்டத்துக்கு மின்காந்த ஓட்ட மானிகள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்கி பொருத்தல்<br>**ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(U)/DROU/MITIGATION/2017/27** | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 120,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச்சான்றிதழ் | | கேள்விகள் பிரிவு, பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (ஊவா), தே.நீ.வ.வ.ச., மெதிரிய வீதி, பதுளை. தொலைபேசி: 055-2230934, தொலைநகல்: 055-2230974 | 22/03/2017 14.00 மணி |
| பண்டாரவளை நீர் வழங்கல் திட்டத்துக்கு VSD உடனான உட்பொதிக்கும் செங்குத்து பல்நிலை பம்பி தொகுதிகள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்கி, பொருத்தல்<br>**ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(U)/DROU/MITIGATION/2017/09** | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 150,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச்சான்றிதழ் | | கேள்விகள் பிரிவு, பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (ஊவா), தே.நீ.வ.வ.ச., மெதிரிய வீதி, பதுளை. தொலைபேசி: 055-2230934, தொலைநகல்: 055-2230974 | 22/03/2017 14.00 மணி |
| பதுளை நீர் வழங்கல் திட்டத்துக்கு VSD உடனான மையவிலக்கு பம்பி தொகுதிகள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்கி, பொருத்தல்<br>**ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(U)/DROU/MITIGATION/2017/10** | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 150,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச்சான்றிதழ் | | கேள்விகள் பிரிவு, பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (ஊவா), தே.நீ.வ.வ.ச., மெதிரிய வீதி, பதுளை. தொலைபேசி: 055-2230934, தொலைநகல்: 055-2230974 | 22/03/2017 14.00 மணி |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்தல்** | | | | | | |
| நீர்கொழும்பு மேலதிக பொறியியலாளர் அலுவலகம், கம்பஹா மேலதிக பொறியியலாளர் அலுவலகம் மற்றும் ரத்தொலுவ (விநியோகம்) நீர் வழங்கல் திட்டத்துக்கு 03 நீர் பவுஸர்களை வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல: RSC(W/N)/HIRING/GAM(O&M)/2017/10** | 2000/- + பெ.சே. வரி | ரூபா. 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேல் வடக்கு) இல. 433/4 A, கனேமுல்ல வீதி, கடவத்தை. தொலைபேசி: 0112922129, தொலைநகல்: 0112922146 | 22/03/2017 14.00 மணி |
| தெவிநுவர, கந்தர, கொட்டேகொட நீர் வழங்கல் திட்டத்துக்கு Crew Cab வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல: RSC(S)/P&C/Devi,Gan, K'goda/Hiring/Crew Cab/O&M/2017-72** | 500/- + பெ.சே. வரி | ரூபா. 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. தொலைபேசி: 041-2229792, தொலைநகல்: 041-2224769 | 22/03/2017 14.00 மணி |
| காலி நீர் வழங்கல் திட்டத்துக்கு Crew Cab வாடகைக்கு அமர்த்தல்.<br>**ஒப்பந்த இல: No:RSC(S)/P&C/Galle/Hiring/Crew Cab/O&M/2017-73** | 500/- + பெ.சே. வரி | ரூபா. 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. தொலைபேசி: 041-2229792, தொலைநகல்: 041-2224769 | 22/03/2017 14.00 மணி |
| மஹரகம பிராந்திய முகாமையாளருக்கு Crew Cab வாகனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல: WC/E&M/2017/05** | 1,000/- + பெ.சே. வரி | ரூபா. 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேல் மத்தி), இல. 175A, களுதொட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட. தொ.பே/தொ.நகல்: 011- 2856420-3 | 22/03/2017 14.00 மணி |
| கோட்டே பிராந்திய முகாமையாளருக்கு இரண்டு வேன் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல: WC/E&M/2017/06** | 1,000/- + பெ.சே. வரி | ரூபா. 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேல் மத்தி), இல. 175A, களுதொட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட. தொ.பே/தொ.நகல்: 011- 2856420-3 | 22/03/2017 14.00 மணி |
| கொழும்பு நகர வடக்கு பிராந்திய முகாமையாளருக்கு இரண்டு வேன் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல: WC/E&M/2017/07** | 1,000/- + பெ.சே. வரி | ரூபா. 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேல் மத்தி), இல. 175A, களுதொட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட. தொ.பே/தொ.நகல்: 011- 2856420-3 | 22/03/2017 14.00 மணி |
| கட்டுமான முகாமையாளருக்கு Crew cab ஒன்றை வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல: WC/E&M/2017/08** | 1,000/- + பெ.சே. வரி | ரூபா. 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேல் மத்தி), இல. 175A, களுதொட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட. தொ.பே/தொ.நகல்: 011- 2856420-3 | 17/03/2017 14.00 மணி |
| **பணியாளர் சேவை** | | | | | | |
| குருநாகல் பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்துக்கு (வடமேல்) சாரதிகளை வழங்குதல்<br>**ஒப்பந்த இல: RSC(NW)/SER/SER & CON/RSC OFFICE/SS-01/ 2017/16** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 8,000/- | பணியாளர் சேவைகளை வழங்குவதில் இரண்டு வருட அனுபவம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடமேல்), தே.நீ.வ.வ.ச., தம்புள்ளை வீதி, குருநாகல் தொ.பே: 037-2221161 தொ.நகல்: 037-2230086 | 29/03/2017 14.00 மணி |

தகுதித்தன்மைக்கான சான்றுகளுடன் வியாபாரக் கடிதத் தலைப்பில் ஆவணங்களுக்கான வேண்டுகோள் கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும். மற்றும் **இறுதித் திகதிக்கு முன்னைய நாள்** வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்கும் இடையில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடங்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

கேள்விகள் மூடப்பட்டவுடனேயே சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். **தாமதமாக விலைமனு சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.**

**தவிசாளர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

**நீர் வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்**

## தொடரும் வட கொரியாவின் அத்துமீறல்:



# ஐ.நா. பாதுகாப்பு சபையில் இன்று அவசர கூட்டம்



வட கொரியா மீது மேலும் புதிய தடைகளை விதிக்கவும் வட கொரியாவிலன் தொடர் அத்துமீறல்கள் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு சபை இன்று அவசரமாக கூடவுள்ளது.

உலக நாடுகளின் தடை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் கண்டனத்துக்குள்ளாகி வரும் வட கொரியா அதிபர் கிம் ஜாங் உன், அணு ஆயுதங்களையும், கண்டம்விட்டு கண்டம் பாயும் நவீனரக ஏவுகணைகளையும் அவ்வப்போது தொடர்ந்து பரிசோதித்து வருகிறார்.

இந்நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை மீண்டும் 4 ஏவுகணைகளை பரிசோதித்தது. இதனால் ஜப்பான் கிழக்கு கடல் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ஜப்பானிலுள்ள அமெரிக்க இராணுவ தளத்தை தாக்குவதற்கான ஒத்திகையாகவே இந்த ஏவுகணை பரிசோதனை நடத்தப்பட்டதாக வட கொரியா தெரிவித்திருந்தது.

இதைப் போன்ற ஆத்திரமூட்டும் செயற்பாடுகளை வட கொரியா கைவிட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அண்டோனியோ கட்டரெஸ் குறிப்பிட்டிருந்தார்.

வட கொரியாவின் இந்த பேரழிவுப் பாதையை இந்த உலகம் அனுமதிக்காது என ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்க தூதரும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ஜப்பானிலுள்ள அமெரிக்க இராணுவ தளத்தின்மீது தாக்குதல் நடத்தப் போவதாக வட கொரியா மிரட்டியுள்ள நிலையில் இந்த நெருக்கடியை சமாளிக்கவும் வட கொரியா மீது மேலும் புதிய தடைகளை விதிக்கவும் வட கொரியாவின் தொடர் அத்துமீறல் தொடர்பாக விவாதிக்கவும், அந்நாட்டுக்கு எதிராக மேலும் சில புதிய தடைகள் விதிப்பது தொடர்பாக ஆலோசிக்கவும் ஐ.நா. பாதுகாப்பு சபை இன்று அவசரமாக கூடுகிறது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை வளாகத்தில் (உள்நாட்டு நேரப்படி) இன்று காலை பத்துமணியளவில் ஆரம்பமாகும் இந்த அவசர கூட்டத்தில் பாதுகாப்பு சபையில் உறுப்பினர்களாக இருக்கும் அனைத்து நாடுகளும் பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.




## ஈராக்கில் உக்கிரமடையும் இருதரப்பு மோதல்: மொசூலிலிருந்து 2 இலட்சம் பேர் இடம்பெயர்வு



ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் கட்டுப்பாட்டிலுள்ள மொசூல் நகரை கைப்பற்ற அந்த நாட்டு அரசுப் படைகள் தீவிரமாக போரிட்டு வருகின்றன. இருதரப்புக்கும் இடையே கடும்மோதல் உக்கிரமைந்துள்ளதால் அந்நகரிலிருந்து சுமார் 2 இலட்சம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

கடந்த 2014 ஜூனில் மோசூல் நகரை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றினர். அந்த நகரை மீட்க, கடந்த 2016 ஒக்டோபரில் மிகப்பெரிய போர் தொடுக்கப்பட்டது. கடந்த 6 மாத போருக்குப் பிறகு மேற்கு மொசூல் பகுதியை அரசுப் படைகள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளன.

அமெரிக்க கூட்டுப் படைகளின் ஆதரவுடன் ஈராக் அரசுப் படை தொடர்ந்து முன்னேறி வருகிறது. இருதரப்புக்கும் இடையே கடும் மோதல் நடைபெறுகிறது. இதனால் மொசூல் நகரிலிருந்து சுமார் 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி மட்டும் 17 ஆயிரம் பேரும் மார்ச் 3ஆம் திகதி 13 ஆயிரம் பேரும் மொசூலை விட்டு வெளியேறினர்.

பெரும் எண்ணிக்கையில் மக்கள் வெளியேறுவதால் ஈராக் அரசுப் படை அமைத்துள்ள அகதிகள் முகாம்கள் நிரம்பி வழிகின்றன. எனவே மீதமுள்ள மக்கள் குர்து படைகள் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இது குறித்து ஈராக் அரசு வட்டாரங்கள் கூறியபோது, நாளொன்றுக்கு சுமார் 10 ஆயிரம் பேர் அகதிகள் முகாமுக்கு வருகின்றனர். அவர்களுக்கு போதிய இடவசதியை ஏற்படுத்தி கொடுப்பது மிகுந்த சிரமமாக உள்ளது என்று தெரிவித்தன.

## ஜெயலலிதா மயங்கிய நிலையிலேயே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்

### எய்ம்ஸ் மருத்துவர்கள் பரபரப்பு அறிக்கை



(திருச்சி சாஹுல் அமீது)

போயஸ் கார்டனிலிருந்து ஆம்புலன்ஸ் மூலம் ஜெயலலிதா மயக்கமான நிலையில்தான் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார் என்று எய்ம்ஸ் மருத்துவர்கள் பரபரப்பு அறிக்கை அளித்துள்ளனர்.


முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா கடந்த செப்டம்பர் 22ஆம் திகதி உடல் நலக்குறைவு காரணமாக சென்னை கிரீம்ஸ் சாலையிலுள்ள அப்போலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு 75 நாட்கள் சிகிச்சை அளிக்கப்பட்டது. டிசம்பர் 5ஆம் திகதி இறந்ததாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. எனினும், அவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாக பல்வேறு தரப்பினர் ஆரம்பம் முதலே கூறி வருகின்றனர்.

இந்தநிலையில், முதல்வர் ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளித்த எய்ம்ஸ் மருத்துவர் கில்நானி தலைமையிலான மருத்துவ குழுவினர் ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்த அறிக்கையை சுகாதார துறை செயலாளர் ராதாகிருஷ்ணனிடம் நேற்றுமுன்தினம் வழங்கினர்.

இதை தொடர்ந்து, சுகாதார துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஜெயலலிதா மரணம் குறித்தும், அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சைகள் குறித்தும் அரசியல் கட்சிளின் தலைவர்களும், பத்திரிகைகளும் பல்வேறு விதமான வதந்திகளை பரப்பி வருகின்றன. அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை குறித்த அனைத்து ஆவணங்களும் அப்போலோ மருத்துவமனை மற்றும் எய்ம்ஸ் மருத்துவமனை ஆகியவற்றில் உள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி மாளிகையில் கலாம் இப்தார் வழங்காதது ஏன்?



(திருச்சி சாஹுல் அமீது)

மறைந்த இந்திய குடியரசு தலைவர் அப்துல் கலாம் ஓர் இஸ்லாமியராக இருந்தபோதும் அவர் ஜனாதிபதி மாளிகையில் 'இப்தார்' விருந்து அளிக்காதது ஏன்? என்ற கேள்விக்கு பதிலளித்துள்ளார் அவரது தனிச்செயலாளராக இருந்த பி.எம். நாயர்.

இந்தியாவின் ஜனாதிபதியாக டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல்கலாம் இருந்த போது பி.எம். நாயர் என்பவர் அவருக்கு தனிச்செயலாளராக இருந்தார். அப்துல் கலாம் மறைவுக்கு பின்னர், அவருடன் பணியாற்றிய அனுபவங்களை 'கலாம் எபெக்ட்' என்று நாயர் புத்தகமாகவும் வெளியிட்டுள்ளார். அந்த புத்தகத்தில் கலாம் பற்றி பி.எம். நாயர் குறிப்பிட்டுள்ள மிக முக்கிய நிகழ்வுகள்.

அப்துல் கலாம் இந்திய குடியரசுத் தலைவராக இருந்த சமயத்தில் அவருக்கு ஏராளமான பரிசுப் பொருட்கள் வரும். வெளிநாடுகளிலிருந்தும் ஏகப்பட்ட பரிசுப்பொருட்கள் வந்த வண்ணம் இருக்கும். அவற்றையெல்லாம் அப்துல் கலாம் போட்டோ எடுத்து வைத்து வகைப்படுத்துவார். பின்னர் அப்படியே அதனை ஆவண காப்பகத்துக்கு அனுப்பி விடுவார். ஒரு பொருளை கூட திரும்பி பார்த்தது இல்லை. ஒரு பென்சிலை கூட தனக்கு என்று எடுத்து கொண்டது இல்லை. வெளிநாட்டு சுற்றுப்பயணங்களில் அன்பளிப்புகளை மறுத்தால், அந்த நாடுகளை அவமானப்படுத்துவது போல் அமைந்து விடும் என்பதால்தான் பரிசுபொருட்களை அப்துல்கலாம் பெறுவதை வழக்கமாக கொண்டிருந்தார்.

ரமழான் மாதத்தில் குடியரசுத் தலைவர் 'இப்தார்' விருந்தளிப்பது வழக்கமான பாரம்பரியமான நிகழ்வு. கடந்த 2002 ஆம் ஆண்டு அப்துல் கலாம் குடியரசுத் தலைவராக பொறுப்பேற்ற சமயம். என்னை அழைத்த அப்துல் கலாம்,

''இப்தார் விருந்துக்கு ராஸ்டிரபதி பவனில் எவ்வளவு செலவாகும்? என்று கேட்டார். நான் 22 இலட்ச ரூபா செலவழிப்போம்'' என்றேன். ''இருப்பவர்களுக்கு இப்தார் விருந்தளிப்பதால் என்ன பயன்? அந்த 22 இலட்சத்தை அநாதை இல்லங்களுக்கு பிரித்து வழங்கி விடுவோம். அந்த தொகைக்கு இணையாக அநாதை இல்லத்திலுள்ள குழந்தைகளுக்கு தேவையான உணவுப் பொருட்கள் வழங்க ஏற்பாடு செய்ய சொன்னார். பின்னர் தனியாக என்னை அழைத்து ஒரு இலட்ச ரூபாவுக்கு செக் அளித்து இதையும் சேர்த்து 23 இலட்ச ரூபாவுக்கு குழந்தைகளுக்கு உணவு ஏற்பாடு செய்யுங்கள் என அப்துல் கலாம் கூறிய போது, மனித நேயமிக்க மனிதரிடம் பணிபுரிவது குறித்து மிகுந்த பெருமையடைந்தேன். கலாம் இஸ்லாமியர்தான் என்றாலும் அவர் குடியரசுத் தலைவர் பதவியில் இருந்த வரை குடியரசு தலைவர் மாளிகையில் இப்தார் விருந்து அளிக்கப்பட்டதில்லை.

அப்துல் கலாம் 'யெஸ் சார்' வகை அதிகாரிகளை பக்கத்தில் வைத்து கொண்டதில்லை. ஒரு முறை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, ஜனாதிபதியை சந்தித்து பேசிக் கொண்டிருந்தார். இருவரும் விவாதித்துக் கொண்டிருந்தனர். அப்போது அருகில் நின்ற என்னை பார்த்து மிஸ்டர். நாயர் நான் சொல்வது சரியா? என்று வினா எழுப்பினார். அது சரியாக இருக்காது என்றும் அதற்கான காரணங்களையும் நான் அடுக்கி கூறினேன். உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு பிரமிப்பு. ராஷ்டிரபதியின் கருத்துக்கு சாதாரண அதிகாரி எதிர் கருத்து சொல்வதும் அதனை அவர் அனுமதிப்பதையும் கண்டு நீதிபதி அசந்தே போனார்.

குடியரசுத் தலைவராக அப்துல் கலாம் பொறுப்பேற்ற போது இராமேஸ்வரத்திலிருந்து அவரது உறவினர்கள் 50 பேர் டில்லிக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்கள் அனைவரும் குடியரசுத் தலைவர் மாளிகையில் தங்கியிருந்தனர். அவர்கள் டில்லியை சுற்றிப்பார்க்க ஒரு பஸ் அமர்த்திதரப்பட்டது. அந்த பஸ்ஸுக்கான கட்டணத்தை அப்துல் கலாம் வழங்கி விட்டார். இவர்களில் யாருக்கும் எந்த சமயத்திலும் அரசுக்கு சொந்தமான கார் பயன்படுத்தப்படவில்லை. கலாமின் உறவினர்கள் டில்லியில் தங்கியிருந்த சமயத்தில் அவர்களுக்கு உணவுச் செலவாக 2 இலட்சம் ரூபா குடியரசுத் தலைவர் மாளிகையில் செலவிடப்பட்டது. அந்த தொகையை கலாம் தனது கையிலிருந்து செலுத்தி விட்டார். எந்த குடியரசுத் தலைவரும் இது போன்று செலுத்தியதே இல்லை.

அப்துல் கலாமின் 5 ஆண்டு பதவி காலம் முடிய சில நாட்கள் இருந்த சமயத்தில் குடியரசுத் தலைவர் மாளிகை அதிகாரிகள் ஊழியர்கள் அவரை சந்தித்துக் கொண்டிருந்தனர். அப்போது நானும் அவரை சந்தித்தேன்.

''என்ன மிஸ்டர் . நாயர் உங்கள் மனைவியை காணோம்? என்று கலாம் கேட்டார். எனது மனைவி ஒரு விபத்தில் சிக்கி கால் உடைந்து வீட்டில் இருக்கிறார்'' என்றேன். அடுத்த நாள் எனது வீட்டை சுற்றி ஒரே பொலிஸ். என்னவென்று பார்த்தால் கலாம் எனது மனைவியை பார்க்க வீட்டுக்கே வந்து விட்டார். ஒரு குடியரசுத் தலைவர் சாதாரண ஊழியரின் மனைவியை சந்தித்து பேசுகிறாரே என்று நான் வியந்து போனேன். இவ்வாறு முன்னாள் குடியரசுத் தலைவர் பற்றி பி.எம். நாயர் தெரிவித்துள்ளார்.

# உலகச் செய்திகள்

### கிம் ஜோங் நாம் படுகொலை விவகாரம்:

## வடகொரியாவிலிருந்து வெளியேற மலேசியர்களுக்கு இடைக்கால தடை

### ஜனாதிபதி கிம் ஜோங் உன் உத்தரவு




வட கொரியாவில் இருக்கும் மலேசிய நாட்டினர் எவரும் அங்கிருந்து வெளியேற கூடாது என்று வட கொரியா ஜனாதிபதி கிம் ஜோங் உன் அதிரடியாக உத்தரவிட்டுள்ளார்.

வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்-னின் ஒன்றுவிட்ட சகோதரரான (தந்தையின் சகோதரர் மகன்) கிம் ஜோங் நாம் மலேசிய விமான நிலையத்தில் கடந்த 6-2-2017 அன்று அடையாளம் தெரியாத நபர்களால் படுகொலை செய்யப்பட்டார்.

இக் கொலை தொடர்பாக இரு பெண்கள் மற்றும் வட கொரியாவை சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் கூலிப்படை மூலம் கிம் ஜோங் நாமை தீர்த்து கட்ட வட கொரியா சதி திட்டம் தீட்டியது தெரிய வந்தது.

அவரை கொல்வதற்காக உலக நாடுகளால் தடை செய்யப்பட்ட வீஎக்ஸ் எனப்படும் கொடிய நச்சு இரசாயனம் பயன்படுத்தப்பட்டது பிரேத பரிசோதனையின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டது. இந்நிலையில், பயங்கரமான இரசாயனத்தை இந்த படுகொலைக்கு பயன்படுத்தி இருந்ததை மலேசிய அரசு வன்மையாக கண்டித்தது.

மலேசியாவுக்கான வட கொரியா தூதரை உடனடியாக தங்கள் நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டது. இதற்கு பதிலடியாக தங்கள் நாட்டிலிருந்த மலேசிய தூதரை வட கொரியா வெளியேற்றியது. கிம் ஜோங் நம் படுகொலை தொடர்பாக வட கொரியாவைச் சேர்ந்த விமானி ஒருவரை தேடப்படும் குற்றவாளியாக அறிவித்த மலேசிய அரசு அவரை உடனடியாக தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என வட கொரியாவுக்கு கோரிக்கை விடுத்தது.

இந்நிலையில், வட கொரியாவில் இருக்கும் மலேசியர்கள் எவரையும் அங்கிருந்து வெளியேற கூடாது என்று வட கொரியா ஜனாதிபதி கிம் ஜோங் உன் அதிரடியாக உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக, மலேசிய அரசின் செய்தி நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

''மலேசியாவில் நடந்த சம்பவத்துக்கு முறையான வகையில் தீர்வு காணப்படும் வரை வட கொரியாவிலிருக்கும் மலேசியர்கள் இங்கிருந்து வெளியேற தற்காலிக தடை விதித்து அரசு உத்தரவிட்டுள்ளது'' என குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஈராக்கிற்கு மட்டும் விலக்களித்து

## கையெழுத்தானது புதிய குடியேற்ற மசோதா



அமெரிக்காவுக்குள் நுழைய 6 முஸ்லிம் நாட்டவர்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், ஈராக் நாட்டிற்கு விலக்களித்து புதிய குடியேற்ற மசோதாவில் டிரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக சமீபத்தில் பதவியேற்ற டொனால்ட் டிரம்ப், அதிரடி நடவடிக்கையாக உள்நாட்டுப்போரில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சிரியாவிலிருந்து அகதிகள் அமெரிக்காவுக்கு வர காலவரையற்ற தடை விதித்தார். மேலும், ஈராக், சிரியா, ஈரான், லிபியா, சோமாலியா, சூடான் மற்றும் யெமன் ஆகிய 7 நாடுகளை சேர்ந்தவர்களுக்கு விசா வழங்குவதை 3 மாதங்களுக்கு நிறுத்தி வைத்து டிரம்ப் உத்தரவிட்டார். டிரம்ப்பின் இந்த உத்தரவுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. டிரம்ப் உத்தரவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை விசாரித்த அமெரிக்க நீதிமன்றங்கள், டிரம்பின் உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்துள்ளன.

குடியேற்றம் தொடர்பாக அந்த உத்தரவு சர்ச்சையைக் கிளப்பியது மட்டுமல்லாமல், அமெரிக்காவிலும் அதற்குப் பெரும் எதிர்ப்பு கிளம்பியது. இதையடுத்து, சிக்கல்கள் இல்லாத புதிய குடியேற்றக் கொள்கையை விரைவில் வெளியிடுவேன் என்று டிரம்ப் தெரிவித்திருந்தார். இந்நிலையில், ஈராக்கிற்கு விலக்களித்து புதிய குடியேற்றக் கொள்கை மசோதாவில் டிரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

# ஆண், பெண் சமத்துவத்தை ஏற்படுத்தி சகல பெண்களையும் வலுவூட்டவேண்டும்

## மகளிர் தின வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



வலுவூட்டப்பட்ட பெண்களின் சக்தியிலேயே மனித குலத்தின் பேண்தகு நிலவுகை தங்கியுள்ளது என்பது நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் விடயமாகும். இதனடிப்படையிலேயே ஆண், பெண் சமத்துவத்தை ஏற்படுத்துதல் உள்ளிட்ட சகல பெண்களையும், பெண் பிள்ளைகளையும் வலுவூட்டுதல் எதிர்வரும் 15 வருட காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையினால் அடைவதற்கு எதிர்பார்க்கப்படும் பேண்தகு அபிவிருத்தியில் உள்வாங்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மகளிர் தின வாழ்த்து செய்தியில் தெரிவித்தார்.

இலங்கை தாய்மையை புனிதத்தன்மையுடன் மதிக்கும் ஒரு நாடாகும். எனினும், தாய்மைக்கு வழங்கப்படும் உயர் கௌரவத்தினால் மாத்திரம் ஒட்டுமொத்த பெண் சமூகத்திற்குமான பாதுகாப்பு கிடைக்கின்றதென கருத முடியாது. நாட்டில் பேண்தகு அபிவிருத்தி ஏற்படுத்தும் முயற்சியில் பெண்களின் தனித்துவமும், பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும் வகையிலும், அபிவிருத்திச் செயற்பாடுகளில் செயற்திறனான முறையில் பெண்களுக்கு பெற்றுகொடுக்க அரசு திட்டம் வகுக்கவேண்டும்.

இலங்கை மகளிரின் பிரதிவிம்பத்தினை கௌரவமான முறையில் சமூகத்தில் நிலை நிறுத்தும் நோக்கத்தோடு முக்காலத்தையும் காண்பவள்-வலுக்கொண்டு வெல்பவள் என்ற தொனிப்பொருளில் ஏற்பாடுசெய்யப்படும் இவ்வாண்டின் சர்வதேச மகளிர் தின செயற்பாடுகள் வெற்றிபெறவேண்டும் என பிரார்த்திக்கிறேன் என தெரிவித்தார்.

# எதிர்க்கட்சியினரால் சமூக ஊடகங்களில் பரப்பப்படும் பொய்ச் செய்திகளை நம்பாதீர்கள்

## ஜகார்த்தாவில் மைத்திரி

எதிர்க்கட்சியினர் சமூக ஊடகங்களை தவறாகப் பயன்படுத்தி நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதற்காக பொய்யான செய்திகளை பரப்பி வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு இந்தோனேசியா சென்றுள்ள ஜனாதிபதி, நேற்றுமுன்தினம் இந்தோனேசியாவில் வாழும் இலங்கையர்களுடன் ஒரு சந்திப்பை மேற்கொண்டார். இச்சந்திப்பின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த ஜனாதிபதி,

இவ்வாறான பொய்ச் செய்திகள் குறித்து வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் கவனமாக இருக்க வேண்டும். சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி வெளியிடப்படும் இந்த பொய்ச் செய்திகளை நம்பவேண்டாம்.

1979 ஆம் ஆண்டு பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க விஜயம் செய்த பின் நாட்டுத் தலைவர் ஒருவர் இந்தோனேஷியாவுக்கு விஜயம் செய்தது எனது விஜயமாகும்.

இன்று சர்வதேச நாடுகளில் இலங்கைக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. இந்த விஜயம கழித்து ஒரு வாரத்தில் ரஷ்யப் பிரதமர் வல்டமிர் பூடினின் அழைப்பில் ரஷ்யா செல்லவுள்ளேன்.

மிகவும் மோசமான 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நீக்க 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி சுதந்திர ஆணைக்குழுக்களை அமைத்தோம். தொடர்ந்து நாம் ஜனநாயக சீர்திருத்தங்களை நாட்டில் அமுல்ப்படுத்துவோம்.

இந்தோனேசிய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்பை பாராட்டிய ஜனாதிபதி, வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக 5,000 மெட்றிக் தொன் அரிசியை இந்தோனேசியா அன்பளிப்பாக வழங்கியதை நன்றியுடன் நினைவுகூர்ந்தார்.

இந்தோனேசியாவில் உள்ள இலங்கை தூதுவர் அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. ஜனாதிபதி அவர்களின் வருகையை நினைகூருமுகமாக தூதுவர் அலுவலக வளாகத்தில் நாக மரக் கன்று ஒன்றும் நடப்பட்டது.

### நல்லாட்சி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

எதுவும் நிறைவேறாமல் ஏமாற்றத்துடனே உள்ளனர்.

பொருட்களின் விரைலகள் உயர்வடைந்துள்ளன. கோவாவை விற்கமுடியாமல் விவசாயிகள் அதனை அழிக்கின்றனர். ஏனைய பகுதிகளில் அவை கூடுதல் விலைக்கு விற்கப்படுகின்றன.

பட்டதாரி வறிய மாணவர்கள் நியமனம் வழங்குமாறு கோரி வெயில் மழை பாராது வீதியில் உண்ணாவிரதம் இருக்கின்றனர். வடக்கு கிழக்கில் தொழில் வாய்ப்புக்களோ தொழிற்சாலைகளோ கிடையாது சுயதொழில் மேற்கொள்ளவும் வழியில்லை. பட்டதாரிகளின் உண்ணாவிரதம் பாரதூரமானது. இந்த போராட்டம் வேறு வழியில் வெடித்தார் பெரும் பிரச்சினையாக மாறிவிடும் அவர்கள் எம்மீது பழி சுமத்துவது நியாயமானது. நிதி அமைச்சு தலையிட்டு வடக்கு கிழக்கில் தனியார் தொழிற்சாலைகளை உருவாக்கினால் அமைச்சர்களிடம் தொழில்வாய்ப்பு கேட்டு கெஞ்ச வேண்டி ஏற்படாது என்றார்.

# ஹெரோயின் கடத்தல் விவகாரம் சந்தேகநபரிடம் தீவிர விசாரணை

கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியில் நேற்றுமுன்தினம் 13.5 கிலோகிராம் ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை தடுப்புக்காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

குறித்த சந்தேகநபரிடம் இருந்து பெறப்பட்ட தகவலின் பிரகாரம், ஹெரோய்ன் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையதாக கூறப்படும் பிரதான சந்தேகநபராக ஜபன் சூட்டி என தொடர்பிலான தகவல்களை பொலிஸார் திரட்டியுள்ளதோடு, குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய பெண்ணொருவர்; குறித்தும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கமைய பிரதான சந்தேகநபரின் வீட்டை சோதனைக்கு உட்படுத்திய போது, அங்கு மறைத்துவைக்கப்பட்டிருந்த 81 இலட்சம் ரூபா பணம், தங்க நகைகள் மற்றும் அடகுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட காணியுறுதிப் பத்திரங்கள், வாகன சாவிகள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

### ஊடகவியாளர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் நவமணிப் பத்திரிகையின் ஹாரிஸ்பத்துவ செய்தியாளராக நீண்ட காலம் பணிபுரிந்த இவர் ஓர் எழுத்தாளருமாவார்.

மத்திய மாகாண கல்வி திணைக்களத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் காலம்சென்ற வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீத் மற்றும் தற்போதைய தபால் சேவைகள் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம் ஆகியோருடன் நெருங்கி செயற்பட்டவராவார்.

குவைத்தின் இலங்கை தூதுவராலயத்தின் அதிகாரியாக பணிபுரிந்த ரியாஸ் மற்றும் விவசாய திணைக்களத்தின் றிஸ்மி, றஸீம், ருஸ்தா ஆகியோரின் தந்தையாவார். ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மற்றும் கண்டி மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தில் முக்கிய பதவிகளை வகித்தார்.

இவரது ஊடக சேவையை மதித்து முஸ்லிம் மீடியா போரம் இவரை கௌரவித்தது.

இவரது ஜனாஸா இன்று காலை 11 மணிக்கு கட்டுகஸ்தோட்ட பொல்கஹதெனிய 594/3 இலக்க அவரது வீட்டிலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு உக்குரஸ்பிட்டிய பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படும்.

இதேநேரம் இவரது மறைவு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளது.

### கண்டி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆரம்பிப்பதற்கும் கூட்டத்தை கண்டி மாநாகரில் நடத்துவதற்கும் மத்தியகுழு தீர்மானித்ததாக கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான போக்குவரத்து அமைச்சர் நிமல் ஸ்ரீபால டி சில்வா தெரிவித்தார்..

### பாராளுமன்ற...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செயற்பாடுகள் நியாயமானதல்ல என்று பாராளுமன்ற உறுப்பினர் ஆஷூ மாரசிங்க விமர்சித்ததைத் தொடர்ந்தே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

தான் சுயேற்சையாக இருந்தே அவ்வாறு கருத்து தெரிவித்ததாக ரதன தேரர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், இங்கு குறுக்கிட்ட அமைச்சர் ராஜித சேனாரத்ன, பொதுத் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசிய கட்சிக்கு இலகுவாக தனித்து ஆட்சியமைக்க முடியுமாக இருந்தும் தேசிய நல்லிணக்கத்தை நோக்காக கொண்டே இணக்க அரசாங்கமொன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

விவாதத்தில், மஹிந்த ஆட்சியை வீழ்த்துவதில் ஐ.தே.க பெரும் பங்காற்றியுள்ளதாகவும், அதனாலேயே இன்று ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன இருப்பதாகவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

### பல்கலைக் கழக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி நேற்று தெரிவித்தார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் முகங்கொடுத்துவரும் பிரச்சினைகள் குறித்து உயர் கல்வி அமைச்சர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியனவுக்கு பல தடவைகள் அறிவித்தும் தீர்வும் முன்வைக்கப்படாததைத் தொடர்ந்தே மேற்படி தொழிற்சங்க நடவடிக்கையொன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டதாகவும், அரசாங்கம் கவனம் செலுத்தத் தவறுகின்றபோது பணிப் பகிஷ்கரிப்புகள் தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

மார்ச் 8, 9ஆம் திகதிகளில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளோம். சில பல்கலைக்கழகங்களில் இத்தினங்களில் பரீட்சைகளும் நடைபெற திட்டமிடப்பட்டிருந்தன. வைத்திய வேலை நிறுத்தத்தின் போது நோயாளர்கள் பாதிக்கப்படுவது போன்று விரிவுரையாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளின்போது மாணவர்கள் பாதிக்கப்படுவதும் நிதர்சனமே. எனினும் பதிவாளர்களுக்கு தொழிற்சங்க நடவடிக்கை குறித்து நேரகாலத்துடன் அறிவித்துள்ளோம்.

அரச பல்கலைக்கழகங்களின் தரத்தை அரசாங்கமே குறைக்க முயற்சிக்கின்றது. தனியார் பல்கலைக்கழகங்களின் தரத்தை நாட்டின் உயர்த்திக் காட்ட முற்படுகின்றது. அரச விரிவுரையாளர்களின் ஊதியங்கள் புதிய சுற்றறிக்கைகள் மூலம் பெருமளவில் குறைவடைந்துள்ளது. இதுதொடர்பாக பல தடவைகள் கலந்துரையாடியும் தீர்வில்லை.

9ஆம் திகதி மாலை அனைத்து விரிவுரையாளர்களும் கொழும்பு பல்கலையின் கலைப்பீடத்தில் ஒன்றுகூடவுள்ளோம். அரசின் நடவடிக்கைகள் சாதகமான அமையாதபோது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடவுள்ளோம்- என்றார்.

### வடமேல் மாகாண ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பிரேரணை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வடமேல் மாகாண ஆளுநர் 13ஆவது திருத்தச் சட்டத்தின் சில சரத்துகளை மீறி செயற்படுவதாகவும் அது மாகாணசபை சிறப்புரிமை சட்டத்தை மீறுவதாகவும் சுட்டிக்காட்டி ஆளுநருக்கு எதிராக ஆளும்கட்சி நேற்று பிரேரணையொன்றை கொண்டுவர முன்வந்தது.

இந்தப் பிரேரணையை சமர்ப்பிதற்கு முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள், இது குறித்து ஜனாதிபதியுடன் கலாந்தாலோசித்துவிட்டு முடிவெடுக்க வேண்டும். அவர் தற்போது வெளிநாட்டில் இருப்பதினால், இப்பிரேரணையை சமர்ப்பிக்க ஆதரவளிக்க முடியாதென வடமேல் மாகாணசபை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களான றிஸ்வி ஜவஹர்ஷா மற்றும் எஸ்.எச்.எம். நியாஸ் ஆகியோர் மறுத்துவிட்டனர்.

இதுகுறித்த கருத்துக்கூறிய வடமேல் மாகாணசபை உறுப்பினர் எஸ்.எச்.எம். நியாஸ் கூறியதாவது;

நல்லாட்சி அரசாங்கம் உருவாக்கப்பட்டதன் பின்னர்இ பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின்கீழ் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வடமேல் மாகாண ஆளுநர் நியமிக்கப்பட்டார். ஆளுநர் தொடர்பான பிரச்சினைகளை ஜனாதிபதியுடன் பேசி தீர்த்துக்கொள்வதற்ககான சந்தர்ப்பங்கள் இருந்தபோதிலும்இ வடமேல் மாகாணசபையின் ஆளும்கட்சியானது குறுகிய அரசியல் நோக்கத்துக்காக செயற்படுவதை முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளமாட்டாது.

மாகாண சபைகளுக்கான அதிகாரப் பரவலாக்கம் முற்றுமுழுதாக வழங்கப்படவேண்டும் எனும் கருத்தில் முஸ்லிம் காங்கிரஸ் உறுதியாக இருக்கிறது. ஆனால், அரசியலை மையமாக வைத்து ஆளும்தரப்பினர், ஆளுநருக்கு எதிராக முன்னெடுக்கின்ற இந்த செயற்பாட்டுக்கு மு.கா. ஒருபோதும் ஆதரிக்காது. ஜனாதிபதி நாடுதிரும்பும்வரை இந்தப் பிரேரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்

52 உறுப்பினர்களைக் கொண்ட வடமேல் மாகாணசபையில் மு.கா. சார்பாக றிஸ்வி ஜவஹர்ஷா மற்றும் எஸ்.எச்.எம். நியாஸ் ஆகிய இரண்டு உறுப்பினர்கள் இருக்கின்றனர். இந்த இருவரும் வாக்களித்தால் மாத்திரமே ஆளும்தரப்பினருக்கு 2/3 பெரும்பான்மையை கிடைக்கும் என்ற நிலையில் மு.கா. தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### இராணுவ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

எவ்வித முன்னறிவிப்புமின்றியே இரண்டு கடற்படைத் தளபதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடத்தல் சம்பவமொன்றிற்கு உடந்தையாக இருந்த இரு கடற்படைத் தளபதிகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மார்ச் 3ஆம் திகதி கைதுசெய்திருந்தனர்.

சர்வதேச பாடசாலையில் பயின்றுவந்த 6 மாணவர்கள் 2010ஆம் ஆண்டு கடத்தப்பட்ட சம்பவத்துக்கு உடந்தையாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தளபதிகளான சுமித் ரணசிங்க மற்றும் லக்ஷான் உதயகுமார ஆகியோரை கைதுசெய்திருந்தது.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் அதுரலியே ரதன தேரர்,

ஜனாதிபதி, பிரதமருக்கு முன்னறிவிப்பின்றியே கடற்படைத் தளபதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். படையினர் இவ்வாறு கைதுசெய்யப்படுவது தேசிய பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும் செயலாகும்- என்றார்.

### இந்திய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வெளியிடப்பட்டுள்ளது. எதுஎவ்வாறு இருப்பினும், இலங்கை கடற்படை இதனை மறுத்துள்ளது.

இந்தநிலையில், இச் சம்பவம் தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சு வருத்தம் தெரிவித்திருக்கிறது.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சக வட்டாரம், இந்திய மீனவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் மிகுந்த வேதனை அளிக்கிறது. இலங்கைக்கான இந்திய துணை தூதர் இப் பிரச்சினையை இலங்கை பிரதமரிடம் எழுப்பியுள்ளார். நடந்த சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்படும் என இலங்கை கடற்படையும் உறுதியளித்துள்ளது எனத் தெரிவித்துள்ளது என, தமிழக ஊடகமான தி ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த டிசம்பர் 2-ம் திகதி இருநாட்டு மீனவர்களிடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்குப் பிறகு நடந்துள்ள முதல் துப்பாக்கிச் சூடு சம்பவம் இதுவாகும்.

அத்துடன், இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படும் இந்த தாக்குதலுக்கு தமிழக மீன்வளத் துறை அமைச்சர் டி.ஜெயக்குமார் மற்றும் தமிழக அரசியல்வாதிகள் பலரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

### போதைப் பொருள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தொடர்ந்து தெரிவித்த ஜனாதிபதி,

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பெரும்பாலும் கடற்பாதைகளைப் பயன்படுத்துகின்றனர். நாடுகளின் இறையாதிக்கத்துக்குக்கு அப்பாற்பட்ட சர்வதேச கடல் வலயத்தில் இந்த கடத்தல்காரர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்காக உரிய ஏற்பாடுகள் இல்லாதிருப்பது பாரிய சிக்கலாகும். அதற்கு தீர்வு காணும் பொருத்தமான முறைமையை உருவாக்குவதற்கு இந்து சமுத்திர பிராந்திய நாடுகள் விரைவான கவனம் செலுத்த வேண்டும்.

இப்போது சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல் கைத்தொழில் போன்று பரவியிருப்பது தொடர்பில் பிராந்திய அரச தலைவர்களின் கவனம் செலுத்த வேண்டும். பிராந்தியத்தில் போதைப் பொருள் கடத்தலை முறியடிப்பதற்கு பல்வேறு திட்டங்கள் அமுல்படுத்தப்பட்ட போதிலும், திருப்தியடையக்கூடிய பெறுபேறு கிடைக்கவில்லை.

இந்து சமுத்திர பிராந்தியத்துக்கு அண்மையிலுள்ள நாடுகளுக்கு பொருளாதார ரீதியில் பயன்கிட்டிய போதிலும், கப்பற்போக்குவரத்துக்களில் இடம்பெறும் பயங்கரவாத செயற்பாடுகள், கடற்கொள்ளை போன்ற குற்றங்கள் தொடர்பில் பிராந்தியத்திலுள்ள அனைத்து அரச தலைவர்களும் கவனம் செலுத்த வேண்டும். இந்து சமுத்திர பிராந்தியத்தின் கேந்திர முக்கியத்துவம்மிக்க இடத்தில் இலங்கை அமைந்திருப்பது நாட்டின் வர்த்தகம், சுற்றுலா, போக்குவரத்து போன்ற பல்வேறு துறைகளில் உயர்ந்த பட்ச பயன்பாட்டை பெறக்கூடியவாறு பயன்படுத்துவது தற்போதைய அரசாங்கத்தின் குறிக்கோளாகும்.

இந்து சமுத்திர பிராந்தியம் துரிதமாக வளர்ச்சியடையும் பிராந்தியம் என்பதனால் அப்பிராந்தியத்தில் தோன்றும் பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய முறை தொடர்பில் விரைவான கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்கு இந்த மாநாடு மிக பொருத்தமாகவே உள்ளது என தெரிவித்தார். இந்து சமுத்திர பிராந்திய தலைவர்கள் மாநாட்டுக்கு இதற்கு முன்னர் தலைமை வகித்த இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா நிறைவேற்றிய சேவையை பாராட்டிய ஜனாதிபதி, இம்முறை மாநாட்டின் உபசரணை நாடான இந்தோனேசியா ஆற்றிய பெரும் சேவையையும் பாராட்டினார்.

அத்துடன் மாநாட்டின் அடுத்த தலைமைத்துவம் கிடைக்கவுள்ள தென் ஆபிரிக்காவுக்கு ஜனாதிபதி வாழ்த்து தெரிவித்தார்.

இந்து சமுத்திர பிராந்தியத்திலுள்ள நாடுகளின் பேண்தகு மற்றும் சமமான அபிவிருத்தி நோக்காகக் கொண்டு நடத்தப்படும் இந்து சமுத்திர பிராந்திய அரச தலைவர்கள் மாநாடு நேற்று முற்பகல் இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகரில் கோலாகலமாக ஆரம்பமானது.

மாநாடு நடைபெறும் ஜகார்த்தா நகர மாநாட்டு மண்டபத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்தோனேசிய ஜனாதிபதியினால் வரவேற்கப்பட்டார்.

தென் ஆபிரிக்க ஜனாதிபதி, அவஸ்திரேலிய பிரதமர், பங்களாதேஷ் பிரதமர், இந்திய துணை ஜனாதிபதி, சீசெல்ஸ் துணை ஜனாதிபதி, உள்ளிட்ட இந்து சமுத்திர பிராந்தியத்தின் 21 நாடுகளின் அரச தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். அவர்களால் இலங்கை ஜனாதிபதிக்கு உயர்ந்த பட்ச வரவேற்பு வழங்கப்பட்டது.

இந்து சமுத்திரத்தை அமைதியான, நிலையான மற்றும் சுபீட்சமான பிராந்தியமாக மாற்றுவதற்காக கடல்சார் ஒத்துழைப்பை பலப்படுத்தும் உடன்படிக்கையிலும் அரச தலைவர்கள் கைச்சாத்திட்டனர். அதற்கு இலங்கையின் உயர்ந்த பட்ச அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கைச்சாத்திட்டார்.

### மைத்திரிக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சர்வதேசம் இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இரண்டாவது நெல்சன் மண்டேலாவாகத்தான் பார்க்கின்றது. அந்தளவுக்கு அவர் ஜனநாயகவாதியாக செயற்படுகின்றார். 7ஜீ மாநாட்டுக்கு அவர் அழைக்கப்பட்டபோதே அவர் முழு உலகத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பற்றுவிட்டார் என்பது உறுதி செய்யப்பட்டுவிட்டது.இந்த மாநாட்டுக்கு என்றுமே இலங்கை தலைவர் ஒருவர் அழைக்கப்பட்டது இல்லை.

உலகில் எவ்வளவோ நாடுகள் உள்ள போது இந்தச் சிறிய தீவின் தலைவரை அவர்கள் தெரிவு செய்தமைக்கு காரணம் அவர் ஒரு முழுமையான ஜனநாயகவாதிகத் செயற்படுகின்றமைதான்.அந்த மாநாட்டில் கலந்துகொண்ட ஏழு தலைவர்களும் எழுந்து நின்று எமது ஜனாதிபதியை வரவேற்றனர்;கௌரவித்தனர்.

மைத்திரிபால இன்று நோபல் பரிசை வெல்லும் நிலைக்குச் சென்றுகொண்டிருக்கின்றார்.அவர் இப்போது அந்த நிலையை அடைந்துவிட்டார்.நிச்சயம் அவருக்கு விரைவில் நோபல் பரிசு கிடைக்கும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அந்த வாய்ப்பை இழந்துவிட்டார்.யுத்தத்தை நிறைவு செய்து அமைதியை நிலைநாட்டியமைக்காக அவருக்கு நோபல் பரிசை பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சியில் நான் இறங்கினேன்.ஆனால்,அவரோ அவரது கையாலேயே அவரது தலையில் மண்ணை அள்ளிப்போட்டுவிட்டார்.

மஹிந்த தனிமையில் இருந்து சிந்திப்பாராக இருந்தால் அவர் செய்த தவறுகளை எண்ணி மனம் வருந்துவார். ஆனால்,அவரைச் சுற்றி இன்னும் இனவாதிகள் சூழ்ந்திருப்பதால்-அவர் இனவாத அரசியலை தெரிவு செய்திருப்பதால் அவர் இதைப் பற்றி சிந்திக்கமாட்டார்.

ஆனால்,மைத்திரி அப்படிப்பட்டவர் அல்ல.அவரது ஒவ்வொரு செயலும் ஜனநாயகவாதியாக அவரை நிரூபித்துக் கொண்டிருக்கின்றது.அவருக்கு நோபல் பரிசு கிடைக்கும் காலம் தூரத்தில் இல்லை.-என்றார்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்



## இலங்கை - பங்களாதேஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர்:
# குசலின் சதம், அசேலவின் அரைச்சதம் வலுவான நிலையில் இலங்கை

பீ.எப்.எம் நிஷாட்

சுற்றுலா பங்களாதேஷ் அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று காலி சர்வதேச மைதானத்தில் ஆரம்பமாகியது. இந்த போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி நேற்றைய ஆட்டநேர முடிவின்போது 4 விக்கட்டுகளை இழந்து 321 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இலங்கை அணி சார்பில் இளம்வீரர் குசல் மெண்டிஸ் இரண்டாவது டெஸ்ட் சதத்தை பூர்த்திசெய்த நிலையில், டெஸ்ட் அரங்கில் 1000 ஓட்டங்களையும் குவித்தார். இதன்படி, 166 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்காது துடுப்பெடுத்தாடி வருகின்றார். மறுமுனையில் அசேல குணரத்ன தனது 2ஆவது டெஸ்ட் அரைச்சதத்தை பூர்த்திசெய்து 85 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட அவர், சதத்தை தவறவிட்டு துரதிஷ்டவசமாக ஆட்டமிழந்தார். எனினும், குசல் மெண்டிஸ், அசேல குணரத்ன ஜோடி இணைப்பாட்டமாக 196 ஓட்டங்களைப் பெற்று 4ஆவது விக்கெட்டுக்காக 2002ஆம் ஆண்டு நிலைநாட்டப்பட்ட சாதனையை முறியடித்தனர். இந்நிலையில், பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட உபுல் தரங்க 4 ஓட்டங்களுடனும், தினேஷ் சந்திமால் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

பங்களாதேஷ் அணி சார்பில் தஷ்கின் அஹமட் மற்றும் மெஹந்தி ஹசன் மீராஸ் தலா ஒரு விக்கட்டினை வீழ்த்தினர். இப்போட்டியில் இலங்கை அணியிலிருந்து தனஞ்சய டி சில்வா நீக்கப்பட்டு, லக்ஷான் சந்தகெனுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. இதன்படி 6 துடுப்பாட்ட வீரர்களுடனும், 5 பந்துவீச்சாளர்களுடனும் இலங்கை அணி களமிறங்கயமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், 2015ஆம் ஆண்டுக்குப் பிறகு பங்களாதேஷ் அணியின் வேகப்பந்துவீச்சாளர் முஷ்தபிசூர் ரஹ்மான் டெஸ்ட் போட்டியில் களமிறங்கியமை இங்கு கவனிக்கத்தக்கது. இன்று போட்டியின் 2ஆவது நாளாகும்.

# உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளுக்கான நீதிமன்ற தடையுத்தரவு நீடிப்பு

பீ.எப்.எம் நிஷாட்

உள்ளூர் கழகங்களுக்கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டிகளை எதிர்வரும் 20 திகதி வரையான 2 வார காலத்துக்கு நடத்துவதற்கு நீதிமன்றத்தால் இடைக்கால தடையுத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் கழகங்களுக்கிடையிலான 50 ஓவர்களைக் கொண்ட ஒருநாள் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டி கடந்த மாதம் ஆரம்பமாகவிருந்த நிலையில் நீர்கொழும்பு கிரிக்கெட் கழகத்தினை குறித்த தொடரில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பை பெற்றுக்கொடுக்குமாறு தெரிவித்து இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த தடையுத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மேலும் 2 வாரங்களுக்கு நீடித்துள்ளது.

இலங்கையில் உள்ள 24 முதற்தர கழகங்கள் பங்குபற்றும் இவ்வருடத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட பிரீமியர் லீக் போட்டிகள் கடந்த மாதம் 18ஆம் திகதி முதல் ஆரம்பமாகவிருந்ததுடன், போட்டி அட்டவணையில் நீர்கொழும்பு கிரிக்கெட் கழகம் பி பிரிவில் இடம்பெற்றிருந்தது. எனினும், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் அவ்விளையாட்டுக்கழகத்திற்கு எதிராக இடம்பெற்று வருகின்ற விசாரணை காரணமாக இம்முறை போட்டித் தொடரிலிருந்து நீக்கப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்திருந்தார்.

இதன்படி குறித்த கழகம், குறித்த மனுவில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபால உள்ளிட்ட 24 பேருக்கு எதிராக வழக்குதாக்கல் செய்திருந்தது. இந்நிலையில் குறித்த தடையுத்தரவு காரணமாக எதிர்வரும் ஜுன் மாதம் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்கவுள்ள வீரர்களைத் தெரிவு செய்வதில் இளுபறி நிலை ஏற்படும் எனவும், விரைவில் இதற்கான தீர்வொன்றைப் பெற்றுத்தருமாறும் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, நீர்கொழும்பு கிரிக்கெட் கழகம் கடந்த வருடம் நடைபெற்ற சரா கிண்ண கிரிக்கெட் போட்டியில் சம்பியன் கிண்ணத்தை வென்றிருந்தது டன், ஏ பிரிவிற்கு முன்னேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் முதற்தர ஏ கழகங்களுக்கு இவ்வருடத்திற்காக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற 16 இலட்சம் ரூபா பணம், நீர்கொழும்பு கிரிக்கெட் கழகத்தின் வங்கிக்கணக்கிலும் வைப்பிலிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன்படி தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற முதற்தர ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளை நடத்துவதற்கு அக்கழகத்தினால் சமர்பிக்கப்பட்ட மனுவை விசாரித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம், வழக்கு விசாரணையை எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம் திகதிக்கு எடுத்துக்கொள்ளவுள்ளதாகவும் அறிவித்தது.

# டோனியை முந்திய சிந்து




விளம்பர வருவாயில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் டோனியை விட பேட்மிண்டன் வீராங்கனை பி.வி.சிந்து முன்னிலை பெற்றுள்ளார். அண்மையில் நடைபெற்ற ரியோ ஒலிம்பிக்கில் மகளிர் பிரிவு பேட்மிண்டனில் வெள்ளிப்பதக்கத்தை வென்ற பிறகு விளம்பரதாரர்கள் மத்தியில் சிந்து மீதான மதிப்பு உயர்ந்துள்ளது

இந்திய விளையாட்டுத்துறை பிரபலங்களில் கோஹ்லி நாள் ஒன்றுக்கு சராசரியாக சுமார் ரூ.2 கோடி சம்பாதித்து வருகிறார். 21 வயதாகும் சிந்து நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூ.1 முதல் 1.25 கோடி வரை சம்பாத்தியம் செய்கிறார். டோனி தனது கிரிக்கெட் வாழ்க்கையின் உச்சத்தில் இருந்த போது பெற்றதைவிட இது அதிக ஊதியமாகும்.

மேலும் ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வாங்கும்வரை சிந்துவின் விளம்பரத் தொகை, ரூ.15 -25 இலட்சமாக இருந்தது. ஆனால் வெள்ளி பதக்கம் பெற்றதும் விளம்பர வருவாய் உயர்ந்துவிட்டது. கடந்த 5 மாதங்களில் சிந்து ரூ.30 கோடி அளவுக்கு விளம்பர ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஓட்டமாவடி சரீப் அலி வித்தியாலயத்தில் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு நிகழ்வு ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய் கிழமை மாலை இடம்பெற்றது. வித்தியாலய அதிபர் ஏ.சி.எம்.அஜ்மீர் தலைமையில் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி கலந்து கொண்டார். அத்துடன் அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.அஸ்ரப், ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜுனைட், ஓட்டமாவடி கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.றியாஸ், ஓட்டமாவடி முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஐ.ரி.அஸ்மி, பிரதேச பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இதன்போது மாணவர்களின் உடல் பயிற்சி கண்காட்சி, விநோத உடை, பழைய மாணவர்களுக்கான, பாடசாலை மாணவர்களுக்கான ஓட்டம், கழகங்களுக்கிடையிலான கலப்பு அஞ்சல் ஓட்டம் உட்பட பல விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றது. (வாழைச்சேனை நிருபர்)



# பாகிஸ்தான் சுப்பர் லீக் சூதாட்ட சர்ச்சை விவகாரம்
## மூவரடங்கிய குழு நியமனம்




டுபாயில் மாதம் 7ஆம் திகதி ஆரம்பமான 2ஆவது பாகிஸ்தான் 'ப்பர் லீக் டி20 தொடரில் நடப்புச் சம்பியனான இஸ்லாமாபாத் யுனைடெட் அணிக்காக விளையாடிய காலித் லத்தீப், சர்ஜீல் கான் ஆகிய வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்ததையடுத்து உடனே போட்டித் தொடரிலிருந்து இடைநீக்கம் செய்வதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்திருந்ததுடன், விசாரணைகளுக்காக மீண்டும் பாகிஸ்தானுக்கு திருப்பி அனுப்பிவைப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இவ் விவகாரம் குறித்து விசாரணை நடப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஏற்கனவே அறிவித்திருந்த போதிலும், விசாரணைகளை துரிதப்படுத்தும் நோக்கில் லாகூர் உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி அஷ்கர் ஹைதர் தலைமையிலான மூவரடங்கிய விசேட குழுவொன்றை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடந்த திங்கட்கிழமை நியமித்துள்ளது. இக்குழுவில் பாகிஸ்தானின் முன்னாள் இராணுவத் தளபதி தெளகிர் சியா மற்றும் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும், கிரிக்கெட் அணியின் முன்னாள் முகாமையாளருமான வசீம் பாரியும் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இதன்படி குறித்த வீரர்களிடம் விசாரணைகள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இருவரும் கடந்த வருடம் நடைபெற்ற டி20 உலகக்கிண்ணத்தில் பாகிஸ்தான் அணிக்காக விளையாடியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், அண்மைக்காலமாக பாகிஸ்தான் அணியில் பிரகாசித்துவரும் 'ல்பிகர் பாபர் மற்றும் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான சஷைப் ஹஸன் ஆகியோரிடமும் குறித்த விடயம் தொடர்பில் பாகிஸ்தான் கிரிக்கெட் ஊழல் தடுப்பு பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## பெங்களூர் டெஸ்ட்:
# அஸ்வினின் சுழலில் சரிந்தது ஆஸி.



இந்தியா - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையே பெங்களூரில் நடைபெற்ற 2ஆவது டெஸ்ட் போட்டியை இந்திய அணி 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. இதன்மூலம் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடரை இந்தியா சமன் செய்தது. இதில் இந்திய சுழற்பந்துவீச்சாளர் அஸ்வின் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி, அணியின் வெற்றிக்குக் காரணமாக இருந்தார். போட்டியின் முதல்நாளில் முதல் இன்னிங்ஸில் இந்தியா அணி 189 ஓட்டங்களையும், அவுஸ்திரேலிய அணி 276 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டது. 2ஆவது இன்னிங்ஸில் இந்திய அணி 274 ஓட்டங்களை எடுக்க, அவுஸ்திரேலிய அணி 112 ஓட்டங்களை மட்டுமே எடுத்து தோல்வியைத் தழுவியது. 3ஆவது டெஸ்ட் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# மே.தீவுகள் தொடரில் மிஸ்பா கேப்டன்



மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக அடுத்த மாதம் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் டெஸ்ட் அணி மிஸ்பா உல்-ஹக் தலைமையில் களமிறங்க உள்ளது. 42 வயதான மிஸ்பா உல் ஹக் தலைமையில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி சமீபத்தில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஒயிட் வாஷ் பெற்றது. இதனால் அவரை தலைவர் பதவியில் இருந்து நீக்கி சர்பிராஸ் அஹமட்டை தலைவராக நியமிக்க வேண்டும் என முன்னாள் வீரர்கள் சிலர் கருத்து தெரிவித்தனர். இதற்கிடையே தனது எதிர்காலத் திட்டங்கள் குறித்து மிஸ்பா முடிவு எடுக்க வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தரப்பில் அவரிடம் அறிவுறுத்தப்பட்டது. இந்நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஷகாரியர் கானை நேற்றுமுன்தினம் மிஸ்பாவை சந்தித்து பேசினார். இந்த சந்திப்புக்கு பிறகு ஷகாரியர் கான் கூறும்போது, அடுத்த மாதம் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாட தயாராக இருப்பதாக மிஸ்பா என்னிடம் தெரிவித்தார். இந்தத் தொடரில் அவரே தலைவராக செயல்படுவார். இது தேர்வுக்குழுவுக்கு தெரியப்படுத்தப்படும் என்றார்.

பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் சிறந்த தலைவராக கருதப்படுகின்ற மிஸ்பா, 53 டெஸ்ட் போட்டிகளில் தலைவராகச் செயற்பட்டு 24 போட்டிகளில் வெற்றியும், 18 போட்டிகளில் தோல்வியையும் சந்தித்துள்ளார். இந்நிலையில், பாகிஸ்தான் ஒருநாள் அணியின் தலைவராகச் செயற்பட்டுவந்த அசார் அலி அவுஸ்திரேயாவுடனான ஒருநாள் தொடரை 4க்கு 1 என இழந்த பின்னர் அப்பதவியிலிருந்து இராஜிமானச் செய்தார். எனவே மேற்கிந்திய தீவுகளுடனான போட்டித் தொடரில் அவ்வணியின் விக்கெட் காப்பாளரும், டி20 அணியின் தலைவருமான சர்பிராஸ் அஹமட் ஒருநாள் அணித்தலைவராக செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





சம்மாந்துறை அல்-அமீர் வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டியில் ஜெஸ்மின் இல்லம் 221 புள்ளிகளைப் பெற்று இவ் வருடத்திற்கான சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது. சம்மாந்துறை அல்-அமீர் வித்தியாலயத்தின் அதிபர் எம்.ஐ.மாஹிர் தலைமையில் கடந்த 04ஆம் திகதி பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வுக்கு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான எம்.ஐ.எம்.மன்சூர், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர், சம்மாந்துறை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.நஜீம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் மன்சூர் ஏ.காதர், சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளர் ஏ.முஸ்தாக் அலி, சம்மாந்துறை கோட்டக்கல்வி பணிப்பாளர் எம்.ஏ.சபூர் தம்பி, சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் கே.எம்.எஸ்.நஜாஸ், சட்டத்தரணி ஏ.எம்.அறுஸ், பாடசாலைகளின் அதிபர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொது மக்கள், பழைய மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இவ்விளையாட்டுப் போட்டியில் லோடஸ் இல்லம் 218 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், சன் புளவர் இல்லம் 179 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டதுடன் இவ் விளையாட்டுப் போட்டி 15 வருடங்களுக்கு பிறகு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(எம்.முஹம்மட் ஜபீர்)

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 08TH MARCH 2017